விலை 16 காசு.

அறப்போர்

வார இதழ்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி: 1, | சென்னை திருவள்ளுவர் ஆண்டு. 1992, கார்த்திகை 16 வெள்ளி 1-12-61 | கதிர்: 40

இதயம் கவர்ந்தாள்!

"பக்கத்து வீட்டிலே பூத்த
பாரிஜாதமே!
தீண்டாமலே தித்திக்கும்
தேன்பாகே!
பனி மலரே, செந்தாமரையே
சிறிதுன்;
வாய்திறந்து செப்பாயோ,
கண்ணே?"

இருநூற்றி ஏழாவது தடவையாக இந்த வசனங்களைப் பாடம் பண்ணிக் கொண்டிருந்தேன், என் வீட்டு மாடியில். என்வீடு என்றால் இரண்டு நாட்களுக்கு முன் நான் குடிபுகுந்த வாடகை வீடு! அந்த ஊரில் உள்ள கல்லூரியில் புதிதாக விரிவுரையாளராக நியமனமாகியிருந்த எனக்கு தமிழ்வரிகள் என்றால் ஆசை. உருப்போட்டு உடனடியாக உள்ளத்தில் சேக்கிக் கொள்வேன்.

அன்றைக்கு வந்த 'பொழில்' பத்திரிகையில் இரண்டு காதலர் சந்திக்கும் கட்டத்தை யாரோ ஒருவர் எழுதியிருந்தார். எழுதியவர் யாராணுலென்ன! 'நல்லது' என்றால் உருப்போடவேண்டியது தானே.

"கத்தாதே கழுதைபோல!—
என்னை
நத்தாதே நத்தைமூக்கா!
பித்தம் உனக்கென்றால்—
பிரியமுடன்
தருவேன் 'பாஸ்"
பைத்திய ஆசுபத்திரிக்கே!'

இருநூற்றியெட்டாவதுதடவையாக நான் மனப்பாடம் செய்ய எண்ணியபோது இந்த வரிகள் என்காதில் விழுந்தன.

நான் திடுக்கிட்டு விட்டேன். இந்தச் சப்தம் எதிர்பாராத நிலையில் எங்கிருந்து எழுகிறது? சுற்றுமுற்றும் உற்றுப் பார்த்தேன். யாருமே இல்லை! அசரீரி என்று சொல்வார்களே, அப்படி ஏதேனும் இருக்குமோ என்ற எண்ணம் ஒருக்கணம் தோன்றியது.

அப்படி இருந்தால் அது 'பத்தா' என்று துவங்கி "சாபவிமோசனம் தந்தேன்" என்றல்லவா முடியும்? இப்படித்தானே புராணப் புளுகர்கள் எழுதிவைத்திருக்கிறார்கள்? ஆகவே, 'கழுதை' என்றும், 'நத்தைமூக்கா' என்றும் என்னைப் 'பாராட்டும்' அசரீரி எங்கிருந்து எழுகிறது என்று அறிவதல் எனக்கு ஆத்திரம் அதிகமானதில் வியப்பென்ன?

மீண்டும் அந்த 'நாசகால' நான்கு வரிகள் சிறிது 'இராகப் பரவபூம்' கலந்து, தாளமும தப்பாமல் கேட்டது, ஔரங்கசீப் சங்கீத வித்யாலயம் நடத்தி, அங்கிருந்து தப்பிய சலிச் சக்கரவர்த்திப் பரம்பரையில்
மிஞ்சிய யாரா



வது, 'பத்ம விபூஷன்' பட்டத்திற்கு விண்ணப்பிக்கிறார்களோ எனற சந்தேகம்கூட எனக்கு எழும்பியது. இபபடி சந்தேகப்பட்டுக் கொண்டே இருந்தால் முடிவு தெரிய வேண்டாமா? 'பொழில்' ஏட்டிலேயும் அத்தகைய வரிகள் இல்லையே! காதலன்மேல் காதலி அன்பு மழை பொழிந்து அடுக்கியிருந்த மன்மதச் சொற்களை அல்லவா அந்த ஆசிரியர் 'ஸ்கேல்' வைத்து அளந்து கவிதை ரூபத்தில் தந்திருந்தார்?

கண நேரம்... 'களுக்'கென்ற சிரிப்பொலி!

நான் துடித்து விட்டேன், 'மோகினிப் பிசாசு' என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்; அப்படி ஏதேனு பச்சை பிரம்மச்சாரியாகிய என்னைத் தேடிவந்து விட்டதா? சிக்கல்கள் ஏற்படுகிற நேரத்தில் மனிதன்தான் எவ்வளவு கோழையாகி விடுகிறான்? என்னால் அதற்குமேல் பொறுக்க முடியவில்லை!

"யாரங்கே?"—நான் அதட்டினேன்!

பதிலே இல்லை! கல்லூரி வகுப்பறையிலே மாணவர்களை அதட்டுகிற போது இத்தகைய மரியாதைகளை நான் திரும்பப் பெற்ற அனுபவம் நிறைய இருந்தாலும் இந்தநேரத்தில் இந்த அவமானத்தைப்பொறுத்துக்கொள்ள முடியுமா?

நான் அறையைவிட்டுவெளியே எழுந்துவந்தேன், "யாரெங்கே?" என்று மீண்டும் கத்திக் கொண்டே!

"பாரிங்கே!"— பதில் குரல் எழுப்பியது.

குரல் வந்த திசையில் நோக்கினேன்.

பக்கத்துவீட்டு சன்னலிலேஒரு பெண் நின்று கொண்டிருந்தாள்—மன்னிக்க; 'தீ மிதிக்கும்' பக்தனைப்போல் 'குதித்துக்' கொண்டிருந்தாள்.

"அம்மா, நீங்க யாரு?"—நான் கேட்டேன்.

கேட்டதுதான் தாமதம்; அந்தப் பெண்ணின் கண்கள் முப்புறம் எரித்த சிவபெருமானின் நெற்றிக்கண்ணைப்போல கனலைக் கக்கின! நான்தான் என்ன முட்டாள்தனமாகக்கேட்டுவிட்டேன்? கேட்கலாமா அப்படி? பதினாறு வயதுப் பெண்ணைப் போய் யாராவது 'அமமா' என்று சொல்லிப் பாருங்கள்; மாறி மாறி கிடைத்திருக்கும் கன்னத்தில்!...'ஏற்றுக் கொள்வேன்' என்று முந்திக் கொள்ளாதீர்கள், நான் குறிப்பிடுவது...அறை!

என் பக்கத்துவீட்டு 'பத்ரகாளி'கூட அந்தத் தண்டனையை தந்திருப்பாள் எனக்கு; ஆனால் அந்தக் 'காலனி' வீடுகளைக் கட்டிய முட்டாள் 'காண்ட்ராக்டர்' இரண்டு சன்னல்களுக்கும் ஐந்தடி தூரத்தையல்லவா வைத்து விட்டான்!

நான் சமாளித்துக்கொண்டு, "நீங்க யாரு?" என்று மீண்டும் இழுத்தேன்!

"நான்தான் பக்கவீட்டு பாரிஜாதம்! தித்திக்கும் தேன்பாகு! பனிமலர்! செந்தாமரை! இது தெரியலியா, நத்தை மூக்கனாரே!"

புகுந்துவிட்டது எனக்கு! நான் ஏட்டில் உள்ளதை இரைந்துப் படிக்கப்போக, அது பக்கத்து வீட்டிலே புயலைக் கிளப்பி விட்டிருக்கிறது! நான் சமாதானம் சொல்ல ஆரம்பித்தேன்.

"அம்மா..."

"என்ன சொன்னீங்க...?"

"இல்லை, இல்லை—ஏ பெண்ணே நான் கவிதையல்லவா படித்தேன்?"

"ஓகோ; ஏ, ஆணே! பக்கத்து வீட்டு பாரிஜாதத்தின்மேல்தான் கவிதை கிடைத்ததா உமக்கு? எதிர்த்த வீட்டுஎருக்கம்பூ. கோடி வீட்டு கோவைப்பூ, மாடிவீட்டு மத்தாப்பூ—பாடிப் பார்த்திருப்பது தானே இப்படி?

"பாடுவேன் ... பாடினால் என்ன?"

"பல் கொட்டிப்போகும்!...

என்னால் இந்த அவமானத்தை சகிக்க முடியவில்லை. பதில் சொல்ல வார்த்தைகளைத் தேடினேன். அதற்குள் 'படார்' என்றொரு சப்தம் பட்டாசுவெடியைப் போல! பக்கத்துவீட்டு சன்னல் மூடிக்கொண்டது!

இது எல்லாவற்றையும்விட பெரிய அவமானமாக ஆகிவிட்டது. ஒரு பெண்—அதுவும் தூர நின்றுகூட அல்ல; பக்கத்தில் நின்றே—ஒரு கல்லூரிப்பேராசிரியரை இப்படி எடுத்தெறிந்துச் செல்வதென்றால்...? கையோடு கைபிசைந்து என்ன பலன்? அவள்தான் மூக்கை உடைத்து விட்டுப்போய் விட்டாளே!

நான் அறைக்குள் சென்றேன். மீண்டும் கவிதையை உருப்போட ஆரம்பித்தேன், ஆனால் உரக்க எழுந்த குரலை அடக்கி மனதிற்குள் படித்துக் கொண்டேன். சூடுபட்ட பூனையல்லவா?

*   *   *

மறுநாள்...கல்லூரி வகுப்பறை!...

"பாடம் ஆரம்பிக்கலாமா?" என்று மாணவர்களைக் கேட்டுக் கொண்டிருந்தேன் நான், அப்படி கேட்காமல்ஆரம்பித்தால் மாணவசிகாமணிகளுக்கு வருத்தமாகி விடும் என்று நான் அனுமதி பெற்று விடுவது சகஜம்! அதுவும் இந்த ஊர் எப்படியோ... இன்றுதானே நான் புலிகளுக்கிடையே புள்ளிமான் மாதிரி நிறுத்தப்பட்டிருக்கிறேன்?

ஆரம்பித்தேன்... 'டக்...டக்' கென்று யாரோ ஓடிவரும் சப்தம் ...திரும்பிப் பார்த்தேன், வகுப்பறை வாசலில் வந்து நின்றாள், ஒரு பெண்! இங்கேயும் வந்து விட்டாளே என்று என் நெஞ்சு நினைக்க கைகள் என் சக்தியையும்மீறி உதறல் எடுக்க நான் சமாளித்துக் கொண்டேன்!

ஆனால் என் நிலையிலேயே அந்தப் பெண்ணும் நின்று கொண்டிருப்பது எனக்கு வியப்பாக இருந்தது!

"யார் நீ...?" என்றேன்.

"பாரிஜாதம் சார்!..."

"சொந்த விஷயம் எல்லாம் இங்கே பேச முடியாது! சாயந்திரமா வீட்டுக்கு வா!" என்றேன் நான்.

மாணவர்கள் சிரித்தார்கள். அப்போதுதான் புரிந்தது அந்தப் பெண்ணும் அந்த வகுப்புமாணவி என்று! எனக்கேற்பட்ட பிரமைக்கிடையே அந்தப் பெண் "எக்ஸ்கியூஸ்மி சார்! இனிமே இந்த மாதிரி லேட்டா வரமாட்டேன் சார்!" என்று சொல்லிக்

(-8ம் பக்கம் பார்க்க)

எண்ணக் கருவூலமாய்--
வண்ண மலர்க்காடாய்--
உண்ணத் தெவிட்டா தேன்கூடாய்--
தயாராகிறது--

அறப்போர்

பொங்கல் மலர்

அறிஞர் அண்ணா அவர்களின் அறிவோவியத்துடன், கலைஞர், நாவலர் வழங்கும் கருத்துரை ஏற்று தைத்திருநாள் பரிசாக வருகிறது.

விலை, விபரம் அடுத்த இதழில்!

ஆசிரியருக்குக் கடிதங்கள்

பீமநகர், திருச்சி,
6—11—61

ஆசிரியருக்கு;

'நாஜிசம்'—சிறந்த ஆராய்ச்சி கட்டுரையாக இருந்தது. அதைப் பற்றி விரும்பாததால் நிறுத்திவிட்டதாகத் தாங்கள் சென்ற இதழில் அளித்திருந்த பதில் சரியல்ல. அது உங்கள் பெருந்தன்மையைக் காட்டுகிறதே ஒழிய, சரியான முடிவு என்று யாரும் கருதமாட்டார்கள். யாரும் எடுத்துச் சொல்லாத விபரங்களைச் சொல்வதையே, 'அரங்கண்ணல் பாணி' என்று நாங்கள் போற்றுகிறோம். ஆகவே உடனடியாக 'நாஜிசம்' கட்டுரையைத் தொடரவும். இது அன்பு கட்டளை.

தங்கள்,

தி. அரசு, சு. மணியன்
தங்கராசு, டி. எஸ். சாமி

(அன்புக் கட்டளையை மதிக்கிறேன். விரைவில் 'நாஜிசம்' நூல் உருவில் வரும். அப்போது உங்கள் ஆவல் அடங்குமல்லவா? நாஜிசத்தின் பின்னணியில் ஒரு டாக்டரின் வரலாறு விரைவில் அறப்போரில் வர இருக்கிறது. தோழர் ராமசாமி எம். ஏ. தீட்டும் அந்த வரலாறு சுவையும் பயனும் கொண்டு உங்களை மகிழ்விக்கும் என நான் நம்புகிறேன் — ஆ-ர்)

°° °° °°

தி. மு. க. கிளை,
முத்தனம்பாளையம்,
கோடந்தூர் (அஞ்சல்)
(கரூர் வட்டம்)

"குறவன் குறத்தி" தேர்தல் பிரச்சாரம் செய்யும் ஏற்பாடுகளை எங்கள் கிளைக் கழகச் சார்பில் தயாரித்திருக்கிறோம். விரும்பும் தோழர்கள் முன்னதாகவே மேற்கண்ட முகவரிக்கு எழுத வேண்டுகிறோம். வழிச்செலவுக்கு மட்டும் பெற்றுக்கொண்டு மூன்று மணி நேர பிரச்சாரம் செய்யப்படும்.

இங்ஙனம்,
செயலாளர்.

*   *   *

திருவள்ளுவர் மத்திய கழம்,
ஆம்பூர்,
6—11—61.

திரு ஆசிரியர் அவர்களுக்கு,

தமிழ் மொழியின் சிறப்பையும் தென்னகத்தின் சிறப்பையும் விளக்கும் ஒப்பற்றத் திருக்குறளை அமெரிக்க ஜனாதிபதி ஜான். எப். கென்னடி அவர்களுக்கு அன்பளிப்பாக அனுப்பியுள்ளோம் என்பதைத் தங்கட்கு மகிழ்ச்சியிடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனபன்,
கு. ஆனந்த -,
செயலாளர்.

—°°—

போட்டிதேவை; நல்லதைச்செய்வதில்!

நாடுபோற்றும் நற்பணி
எம்.ஜி.ஆரின் அன்புள்ளம்
அண்ணாவின் கனிவுரை

எங்கிருந்தாலும் சரி;
என் கலைத்தம்பிகளே,
நல்லதைச் செய்யுங்கள்!



புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். புதுப்புது நன்கொடைகளை ஏழை எளியோருக்கு நல்கிவருவது, தி. மு. க. வும் நாடும் பெருமைப்பட வேண்டிய ஒன்றாகும்! அவ்வகையில் சென்னைவாழ் ஏழை ரிக்ஷாத் தொழிலாளர்களுக்கென்று ஆறாயிரத்துக்கு மேற்பட்ட மழைக்கோட்டுகளை நவம்பர் 27-ந் தேதியன்று எம். ஜி. ஆர். நிறுவனங்களின் நிர்வாகியான தோழர் வீரப்பன் தலைமையில் அண்ணா அவர்கள் வழங்கினார்கள். அப்போது அண்ணா பேசியதாவது:

“எல்லோரும் ஏழைகளுக்கு ஒருநாள் சாப்பாடு போடுவர். கலயாணம் என்று கேட்டால் ஐம்பதோ நூறோ பணம் கொடுப்பார்கள். ஆனால், எம். ஜி. ஆருக்கு மழைக்கோட்டுகள் வழங்கும் எண்ணம் எப்படித் தோன்றியது என்று தெரியவில்லை.

பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாடகத்தில் நடிக்க கலைவாணர் அவர்கள் திருச்சி சென்றிருந்த போது அங்கே வண்டிக்காரர்கள் தங்குவதற்கு நிழல் இன்றி ரயில்வே சந்திப்புக்கு நேராக அவதிப்படுவதைக் கண்டு அவர்களுக்குக் கொட்டகை கட்டித் தந்தார்கள். இந்த நிகழ்ச்சி எனக்கு அதை நினைவுப்படுத்துகிறது. ஏழைகளின் துயரை புரிந்த காரணத்தாலேயே எம். ஜி. ஆர். ஏழைகளுக்கு உதவ முன்வந்திருக்கிறார்.

யாரோ சிலர் இந்த கோட்டுகள் வெறும் பிளாஸ்டிக்கால் செய்யப்பட்டதுதானே என்று கேலி செய்வதாகத் தலைவர் வீரப்பன் கூறினார். இந்தக் கோட்டுகளைப் பார்த்ததும் அவைகளில் ஒன்றை நானே அணிந்துகொள்ளலாமா என்று ஆசை எழுகிறது. இந்த நாட்டில் யார் எந்த நல்ல காரியத்தைச் செய்தாலும் ஒரு சிலர் தூற்றிக்கொண்டே இருப்பதுதான் வழக்கம். நல்ல மனம் கொண்டவர்கள் அதையெல்லாம் பொருட்படுத்தக் கூடாது.

புகழ் பெறுவதற்குத்தான் எம். ஜி. ஆர். இப்படிச் செய்வதாக சிலர் கூறலாமென்றும் தலைவர் வருத்தப்பட்டுக் கொண்டார்.

இதற்காக வருத்தப்படத் தேவையில்லை. ‘ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லாது ஊதியமில்லை உயிர்க்கு’ என்று நமது இலக்கியங்களிலே சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கின்றன. நாம் கட்டிய வீடுகள் நிலைத்து நிற்பதில்லை நாம் அமைக்கும் கோட்டைகள் காலவேகத்தில் அழிந்துவிடும். ஆனால் நாம் ஈட்டும் புகழ் நமக்கு பின்னால் நிலைத்து நிற்கும். எனவே புகழ் பெறுவதற்காக யார் எந்தக் காரியத்தைச் செய்தாலும் தவறில்லை. அதை நல்லவர்கள் வரவேற்கத்தான் செய்வார்கள்.

நல்லதைச் செய்வதில் போட்டியிருந்தால் இதை வரவேற்கவேண்டும். தலைநகரிலே பல ஏழை மக்கள் கட்டாந்தரையிலே படுத்து உறங்குகிறார்கள். அவர்களுக்கு உதவும் வகையில் நான்கு அல்லது ஐந்து பலகை அடுக்குகள் கொண்ட வண்டிகளை உதவினால் மக்கள் அவற்றிலே படுத்து உறங்கலாம். இரவு நேரங்களில் ஏழைகள் வசிக்கும் பகுதிகளுக்கு அந்த வண்டிகளை அனுப்பிவைக்கலாம். ஈரத் தரையில் படுத்து விரைவில் வியாதி வரவழைத்துக் கொண்டு அவதியுறும் மக்களுக்கு அது உதவக்கூடும். இதை மற்றக் கலைஞர்கள் செய்யலாம். எந்தக் கலைஞர்கள் அவர்கள் எங்கிருந்தாலும் சரி. அவர்கள் நன்மை செய்வது எங்களுக்கு மெத்த மகிழ்ச்சி தரும். அவர்கள் எங்கிருந்தாலும் சரி— என்று ஏன் கூறுகிறேன் என்றால் எல்லாக் கலைஞர்களும் இங்கிருந்து சென்றவர்கள்தான்.

மக்களிடமிருந்து பெற்ற பணத்தை மக்களிடமே திருப்பி அளிக்கிறேன் என்று எம். ஜி. ஆர். குறிப்பிட்டது கேட்டு நான் வியப்படைந்தேன். ஏனென்றால் உலகத்தின் ஈடு இணையற்ற தத்துவத்தை எம்.ஜி. ஆர் மிக எளிய வார்த்தைகளிலே விளக்கியிருக்கிறார்.

இந்தக் கொள்கையைத்தான் ஒரு நாட்டில் சமதர்மம் என்கிறார்கள். இன்னொருநாட்டில் சன்மார்க்கம் என்கிறார்கள். மற்றொரு நாட்டில் பொதுவுடமை என்கிறார்கள் எம். ஜி. ஆர். குறிப்பிட்ட இந்த வாசகங்களிலே தி. மு. கழகமே அடங்கியிருக்கிறது.

முதலாளிகள் தொழிலாளர்களினால் பணம் சம்பாதிக்கிறார்கள். அதை தகுந்த அளவில் அவர்களிடம் திருப்பித் தரவேண்டும்.

ஆளும் கட்சியினர் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஓட்டுப்பெறுகிறார்கள். ஆனால் மறுமுறை ஓட்டுப்போடும் அளவாவது உயிரை வைத்திருக்கும் வகையில் அரசாங்கத்தார் அவர்களுக்கு சோறு போடுவதில்லை. இந்த நிலையை மாற்ற வேண்டும்.

தேர்தலுக்காகத்தான் இந்த ஏற்பாடு என்று யாரும் நினைக்க வேண்டாம். ஓட்டுக் கேட்பதற்கு வரவேண்டிய முறைப்படி——வரவேண்டிய வழியில் வந்து உங்களைச் சந்திக்கிறேன்...”

இவர்கள் சந்தித்தால்!

(சென்னைக் கடற்கரையை ஒட்டிச் செல்லும் நெடுஞ்சாலை. அங்கே பச்சை இலைகளே தெரியாத அளவு மஞ்சள் மலர்கள் பூத்துக் குலுங்கும் கொன்றை மரத்தின் அடியில் துயரமேவடிவாகிஅமர்ந்திருக்கிறார் புரட்சிக் கவிஞர். அவருடைய கழுத்திலே செக்கச் செவேல் என்னும் பட்டுச் சவுக்கம் வழக்கம்போல் பளபளத்து மின்னுகிறது. வலக்கரம் தாவாயைத் தாங்கி நிற்க இடக் கரத்தில் 'குயில்' ஏட்டின் சில படிகள்.

தங்க வெள்ளம் பாய்வது போன்ற மாலை வெயிலின் ஒளிப் புனலில் முங்கித் திளைக்கவேண்டிய கவிஞரின்முகத்திலோ விளக்க முடியாத வேதனைச் சுருக்கங்கள். குமுறிப் பொங்கிக் 'கோ' வென்று கதறும் அலைகடலையே அவரது கூரிய விழிகள் நோக்குகின்றன. அவற்றினின்றும் குருதித் துளிகளே பெருக்கெடுத்தாற் போல் தாரை தாரையரக வழிகிறது கண்ணீர்.

சற்றைக்கெல்லாம் 'சரக்' என்ற ஓசையிட்டு ஒரு குலுங்குக்குலுங்கி அவர் முன்னேவந்து நிற்கிறது ஒரு புதிய 'வேன்'. அதிலிருந்து காங்கிரசுக் காற்றுப்பட்டு மினுமினுப் பேறிய வெண்தாடி ஒன்று வெளியே எட்டிப் பார்க்கிறது)

'யாரையா அது? பாரதிதாசனா?' (—குரல் கேட்டதும் கவிஞர் எழுந்து பெரியார் அருகில் செல்கி

✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲

துலாக்கோல்

திருத்துரைப்பூண்டி

✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲

றார். அழுதுகொண்டிருந்தவருக்கு ஆத்திரம் பீறிடுகின்றது. ஆயினும் அடக்கிக் கொள்கிறார்)

பெரி: என்னய்யா இது பச்சைக் கொழந்தை மாதிரியா அழுதுகிட்டிருக்கிங்க? என்ன சமாசாரம்? உங்க குடும்பத்தவங்க யாரானும் காலமாகிப் பூட்டாங்களா?

புட்: குடும்பமே காலமாகிப் போனாலும் குலையாத நெஞ்சுரங் கொண்டவன் நான்.

பெரி; பின்னே ஏன் அழுவுறீங்களாம்?

புரட்; உங்களைப்போய்த் தலைவர் என்றும் தந்தை யென்றும் வரித்துக்கொண்டவர்கள் அழாமல் பின்னே சிரிக்கவா முடியும்?

பெரி: ஏதேது அந்தக் கண்ணீர்த்துளிப் பசங்க வாடை உங்களுக்கும் அடிச்சுப் பூட்டாப்பல இருக்கு?

புரட்: அவர்கள் வாடை ஒழுங்காக விட்டுப்போகாமல் அடித்திருந்தால் இந்நேரம் நான் சும்மாவா இருப்பேன், நீங்கள் நினைத்தவற்றை யெல்லாம் பேசுவதற்கும் நெறியற்ற செயல்கள் எல்லாம் புரிவதற்கும்?

பெரி: சரித்தான் நான் கேள்விப் பட்டதெல்லாம் உண்மைதான் போலே இருக்கு.

புரட்; என்ன கேள்விப்பட்டீர்களாம்?

பெரி: உம்ம பாட்டுத்தான் எளிமையாய் இருக்கும்; பேச்சுத் தடிப்பாத்தான் இருக்கும்னு சொன்னாங்க. நான்கூட நம்பலே. ஆனா இப்பத்தான் தெரியுது. எல்லாம் உங்களைச் சொல்லிக் குத்தம் இல்லேய்யா க. து. பசங்க மாதிரி சினிமா பிடிக்க ஆரம்பிச்சுட்டீங்களே! பணம் குவியும் நாக்கும் தடிக்கும்.

புரட்: உங்களிடமும் பணம் குவிந்துகொண்டுதான் இருக்கிறது.

பெரி; அதனாலே எனக்கும் நாக்குத் தடிச்சுப் போச்சுன்னு சொல்றீங்களா? இந்த ஜனங்களுக்குக் கொஞ்சங்கூட புத்தியில்லே; பகுத்தறிவு இல்லே; நாக்குத் தடிப்பாய் பேசினாலாவது அவங்களுக்குச் சொரணை வருமான்னு பார்க்கிறேன். முதல்லே இந்தச் சினிமாவை ஒழிக்கணும்.

புரச், எம். ஆர். இராதா நடிக்கிற திரைப்படங்களையும் அவர் சிதம்பரம் கார் அன்பளிப்பு விழாவிலே உங்களை வைத்துப் பிடித்திருக்காரே அந்தத் திரைப்படத்தையும் மட்டும் ஒழிக்க மாட்டீர்களாக்கும்!

பெரி: நீங்க ஒரு பைத்தியக்காரரு. ராதாவை ஒழிச்சிட்டா அப்புறம் எனக்கு ஆயிரம் ஆயிரமா பணத்தை அள்ளிக் கொடுக்கிறவங்கயாருஇருக்கா அதனாலேதான் என் பிறந்த நாள் விழாவிலேகூட 'யாரையாவது நான் அதிகமா பாராட்டனுமுன்னு சொன்னா அவர் ராதாதான். ஏன்னா அவர்தான் எனக்கு நிறையப் பணம் கொடுத்திருக்காரு' அப்படீன்னு வெளிப்படையாகவே பேசினேன்.

புரட்: அந்த 'வெளிப்படை' தான் குருசாமியை 'விலக்கும் படை' யாக வேலை செயததாக்கும்! பரவாயில்லை. எனக்கும் அதிலே மகிழ்ச்சிதான். அந்தக் குருசாமிக்கும் எனக்கும் ஆகாது என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே! இராதா எல்லாவற்றிலுமே வல்லமைப் பெற்ற நடிகர் என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு. ஆனாலும், அவர் அப்பட்டமாக உங்களைப் பற்றி ஓர் உண்மையை மக்கள் முன்னால் வைத்தது அவ்வளவு சரியானதாய் எனக்குப் படவில்லை.

பெரி: ராதா பேச்சு அப்படி ஒன்னும் குத்தம் சொல்ற மாதிரியோ குதர்க்கமாகவோ இல்லியே!

புரட்: ஏன் இல்லை? உலகிலே உயர்ந்த மனிதர்கள் வாழ்வதும் சாவதும் எதற்காக?

பெரி: எதற்காகவாம்?

புரட்: தாம் கொண்ட உன்னதமான கொள்கைக்கும் குறிக்கோளுக்காகவுந்தான். ஆனால் நீங்களோ பணத்திற்காகத் தான் வாழ்கிறீர்கள்; பணம் கொடுத்துக் கொண்டே இருந்தால் சாகவே மாட்டீர்கள் என்றெல்லாம் பேசியிருக்கிறார்.

பெரி: ஆமா! அதிலே என்ன தப்பு? காந்தியார் உள்பட எவனாவது கொள்கைக்காகப் பாடு பட்டான் அப்படி இப்படின்னு சொல்றதெல்லாம் சுத்தப் பித்தலாட்டம்? அயோக்கியத்தனம்!

புரட்: அதனால்தான் நீங்களும் ஒவ்வொரு கொள்கையாக நழுவ விட்டுக்கொண்டே வருகிறீர்களாக்கும்?

பெரி: நானா கொள்கையை விட்டுவிட்டேனாவது?

புரட்: பின்னே இல்லையா? சம்பத்துக்குச் சொத்துப் போகக் கூடாது என்கிறத்துக்காக, கிழவர்—குமரியை மணப்பது தவறு என்ற பகுத்தறிவையே படுகுழியில் புதைக்கவில்லையா சமயங்களையே ஒழிக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டே குன்றக்குடியார் அளித்த சமயச் சின்னமான திருநீற்றை பூசிக்கொள்ளவில்லையா? இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்திக்கொண்டே இந்திப்பிரச்சார சபையில் பேசவில்லையா? ஆரியர்களை இந்நாட்டை விட்டே விரட்டவேண்டும், கடலில் தூக்கிப்போட வேண்டும் என்று சொல்லிக் கொண்டே ஆரிய எம். எல். ஏக்கள் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக சொற்பொழிவு சூருவளி நடத்தவில்லையா? கி. ஆ. பெ. விசுவநாதம் தம்மை மிஞ்சிப் போகக் கூடாதே என்பதற்காக அவர் அப்போது கூறிய 'தமிழ் நாடு தமிழருக்கே!' என்பது அயோக்கியத் தனம் என்று சொல்லிவிட்டு திராவிட இன உணர்ச்சியை வளர்க்கவில்லையா? பிறகு, அதே இன உணர்ச்சியால் அண்ணாதுரை நம்மை மிஞ்சி வளர்ந்துவிட்டாரே என்ற வயிற்றெரிச்சலில் 'திராவிட நாடாவது வெங்காய நாடாவது?' என்று சுதந்திரத் தமிழ் நாடு கேட்கவில்லையா? இப்போது அதையும் மறந்துவிட்டு தனி நாடு பிரிவினைக்கே பரம வைரியான காங்கிரசையும் காமராசரையும் ஆதரிக்கவில்லையா? இன்னும்......

பெரி: போதும்! என் கூட இருந்தே எனக்குக் குழிதோண்டுகிற சதிக் கூட்டத்திலே நீங்களும் ஒருத்தர் என்கிறது இப்பத்தான் எனக்குப் புரியுது.

புரட்: இந்த மாதிரி குற்றஞ் சாட்டி உங்கள் பத்திரிகையிலே நீங்களே அறிக்கைகள் வெளியிட்டு ஆறுதல் தேடிக் கொள்வதுதான அடிக்கடி உங்களுக்கு வழக்கமாச்சே? ஆனாலும்...எனக்குப் பிடிக்காதவர் தாம் என்றாலும் குருசாமியை விலகும்படி செய்தது நல்லதில்லை. மணியம்மையின் திருமணத்துக்குப்பின் நீங்கள் தலை நிமிர்ந்து தமிழகத்தில் நடமாட 'விடுதலை' மூலம் அவர் அளவற்ற தொண்டு புரிந்திருக்கிறார். அண்ணன் மகன் திரும்பி வந்துவிட்ட பாசப் பூரிப்பில் அன்றுதொட்டு மெய்க்காவலராய் இருந்த குத்தூசியாரின் நன்றியை மறப்பது நன்றன்று.

பெரி: ஆங்...நன்றியாவதுவெங்காயமாவது! அதுவும் நீங்களா அதைப் பத்தி எனக்குச் சொல்றீங்க?

புரட்: ஏன்?

பெரி: நீங்கள்மட்டும் நன்றி மறக்காதவரா? நான் கோவிச்சுக்கிட்டதையும் பொருட்படுத்தாமே, உங்களுக்கு நிதி திரட்டிக் கொடுத்தாரே அண்ணாதுரை! அவர்கிட்டே எபபடி நடந்துகிட்டீங்க? நான்தான் சமயத்தில் புத்திகெட்டவன் மாதிரி ஏதோ கன்னாபின்னான்னு தரக்குறைவாகூட திட்டினேன்னா, நீங்க எனக்கு மேலே ஒருபடிபோய் எவ்வளவோ கேவலமா அவரைப் பத்தி எழுதினீங்க! பேசினீங்க

புரட்: அவ்வாறெல்லாம் நடந்து கொண்டதற்காக உண்மையில் இப்போது நான் உணர்ந்து வருந்துகிறேன்.

பெரி: ஓகோ!......அதனால்தான் சித்தே முந்தி கண்ணீர்த்துளி சிந்தினிங்க போல இருக்கு!

புரட்: வேறொரு காரணமும் உண்டு.

பெரி: அது என்ன வெங்காயம்?

புரட்: நீங்கள் அடிக்கடி தமிழைப் பற்றியும் தமிழ்ப் புலவர்களையும் தாறுமாருகத் திட்டிக் கொண்டு வருகிறீர்களே அதை நினைத்துதான் அழுகை அழுகையாக வருகிறது,

(9-ம் பக்கம் பார்க்க)

நான் கண்ட அண்ணா

-3-

புது இடம். புது வேலை. நல்ல பெயர் எடுக்க வேண்டுமேயென்கிற ஆர்வம். இவைகளின் காரணமாக இரவு பகலென்று பாராமல் உழைத்த என்னிடம் அண்ணா காட்டிய தாயன்பு சொல்ல முடியா ஒன்றாகும். அதைப்போலவே ஈழத்துஅடிகள்

'திராவிட நாடு' அலுவலகத்தில் அப்போது காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்களின் மருமகரும் நமது கழக முன்னணி வீரரும்; சிறந்த நண்பருமான தோழர் கே. 'டி. எஸ். மணி இருந்தார். அண்மையில் எமையெல்லாம் விட்டு இளவயதில் சென்றுவிட்ட தோழர் இராசபாதர் என்பவர் இன்னொருவர். அஞ்சா நெஞ்சமும் அண்ணா' என்றால் உயிரையும் விடக்கூடிய ஆர். கே. மூர்த்தி, எத்தனைப் பக்கமானாலும் இதோ 'கம்போஸ்' முடிந்ததென்று சொல்லும் பாசத்தின் சின்னமான வெ. சம்பந்தம், 'மெஷின்' ஓட்டப் பயின்று இப்போது காஞ்சிநகர அவைத் தலைவராக விளங்கும் மாணிக்கம், அமைதியே உருவான பஞ்சாட்சரம், அடிக்கடி விகிய்,போய் வரும் தக்கோலம், அருமையுள்ள ஏழுமலை, காலமாபோட்ட குப்புசாமி... இத்தனைத் தொழில் புரிவோரும் கொண்ட ஒரே குடும்பமாக' யிருந்தது திராவிட நாடு அலுவலகம்!

வேறெங்கும் பார்க்க முடியாது இந்த ஒற்றுமையை. சாதாரணமாக ஒரு ஆபீசென்றால் தொழிலாளி—ஓவர்டைம்—அது இது எனறு ஆயிரம் பிரச்னைகளிலிருக்கும். ஆனால் திராவிடநாடு அலுவலகத்தில் இது எதையுமே காண முடியாது! காரணம் அண்ணா அவர்கள்தான்.

சமத்துவமாக எல்லோருடனும் பழகுவதும் இன்னொருவருடைய சுகதுக்கங்களைதன்னுடையதாகக் கருதும் பணிவும், அடிகளாருடைய அன்புள்ளமும், அப்படிப்பட்ட ஒரு பாச உணர்ச்சியை எங்கள் மத்தியிலே பரப்பியிருந்தது. 'குடியரசில்' அம்மைவார்த்தபோது அநாதையாகக் கருதப்பட்ட நிலைக்கும், ஒரு தலைவலி என்றால்கூட தனக்கு வந்ததாகக் கருதும் இங்குள்ள நிலைக்குமிடையிலுள்ள வித்தியாசம் சமதர்மக்கொள்கைகாகப பாடுபடும் என்னைமிகவும் கவர்ந்தது! அதுமட்டுமின்றி அண்ணா அவர்களின் குடும்பத்தில் நானும் ஒருவன் ஆனேன்.

அரங்கண்ணல்

எனக்கென்று கூடப்பிறந்த அண்ணன் தம்பிகள் கிடையாது. பெறற்கரிய அந்தச் சகோதர பாசத்தை நான் அண்ணாவின் இல்லத்தில் பெற்றேன்! நூற்றுக் கணக்கான மைல்களுக்கப்பால் என் பெற்றோர் இருந்தனர். அவர்களில்லாத குறையை அண்ணியும், அம்மாவின் தாய் பங்காரும்மாவும், தொத்தா இராசாமணி அம்மாவும் போக்கினார்கள்.

என்னைக் கண்டதும் "மாமா!'! என்று பரிமளம் கூப்பிட்டுக் கொண்டு ஓடிவரும்போதுஎன்க்கு ஆனந்தமாகயிருக்கும்! அண்ணாவின் சிற்றன்னைமகளான அக்கா 'மச்சி'யின்உதவிகளும்ஒத்தாசைகளும் சாதாரணமானவையல்ல.

எங்கேயோ பிறந்தேன்! எப்படியோ வளர்ந்தேன். ஆனால் எனக்கொரு அண்ணனையும், அண்ணியையும் பெரியம்மாக்களையும் தமக்கையையும் மருமகளையும் காஞ்சியில் நான் பெற்றேன்.

என் குடும்ப விவகாரங்கள் அனைத்தையும் நான் ஒப்படைக்கக்கூடிய ஒரே இடம் இந்த உலகத்தில் உண்டென்றால் அது அண்ணாவின இல்லந்தான்!

பரிமளம் அவன் தம்பியர் இளங்கோ, கௌதமன், பாபு முதலியோர் எத்தனை பேரை 'மாமா' என்று கூப்பிட்டாலும், எனக்கென்று அந்தப் பாசமுள்ள பசுந்தளிர்கள் அளித்திருக்கும் இடம் நினைத்தாலே என்னைப் பரவசமாக்குகிறது.

'ரங்கண்ணா!' என்று தொத்தா அழைக்கவும், அதுக்கு இதுபிடிக்காதே ராணி! வேறெதாவது செய்திருக்கக்கூடாதா என்று அம்மா சொல்லவுமாக நான் அண்ணாவின் குடும்பத்திலிருந்த நாட்களை என்உடம்புவேகுமட்டும் மறக்கவே முடியாது.

இதைப்பற்றி எழுதும்போது உணர்ச்சி அலைகள் இதயத்தில் எம்பி எம்பிக் குதிக்கின்றன!

நான் யாரோ — அவர்கள் யாரோ. எங்களைப் பந்தப்பாசத்துக்குள்ளோராக்கியது எது? நான் சார்ந்த கொள்கைதானே! நான் மட்டுமல்ல, அண்ணாவை 'அண்ணா' என்றழைக்கும் இலட்சக்கணக்கான கழகத்தவர்கள் மனதில், அண்ணா இடம் பெற்றிருக்கிறாரென்றால் அதற்குள்ள மூலகாரணமே அவர்கள் எல்லோரையும் உடன்பிறப்புகளாகக் கருதி அண்ணா பாசத்தையும், அன்பையும் வைப்பதுதான். தவறுகள் செய்தால்கூட தம்பிதவறு செய்தால் கண்டும் காணாதது போலிருக்கும் அண்ணன்போல, மௌனமாக அண்ணா இருப்பது கூட அந்தப் பாசத்தால்தான்!

மூன்றாண்டுகளுக்கு முன்பு—நான் சென்னையில் குடியேறிய ஏழெட்டு மாதங்களுக்கெல்லாம்... திடீரென்றுஒருநாள்காலை நான்கு வயதான என் மூத்த மகன் கடுமையான மஞ்ச காமாலை நோய்க்கு ஆளானான். காய்ச்சல் 105 டிகிரி. இரண்டாவது மகன் பிறந்து மாதம்ஒன்றாகிறது. அந்நேரம் என்துணைவியின் உடல் நிலையும் மோசம். சிறு அதிர்ச்சியென்றாலும் பாதிக்கக்கூடிய இருதயநோய் என் துணைவிக்கு, குழந்தையை எடுத்துக்கொண்டு ஒன்றும் புரியாதவனாய் ஓடினேன்

நானும் டாக்டருமாக ஜெனால் ஆசுபத்திரிக்கு!

பதினைந்து நாட்கள் படாதபாடுபட்டு டாக்டர்கள் அனைவரும் ஆச்சரியப்படக்கூடிய விதத்தில் மகன் பிழைத்தான், ஆனால் அவன் வீட்டுக்குவரும் வரையில் அவனருகிலேயே ஆசுபத்திரியில் கிடந்தது அண்ணாவின் தமக்கையான மச்சிதான்! அந்த நாட்களில் அதிர்ச்சியேதும் என்மனைவிக்கு வராதபடியும், பச்சைக் குழந்தையையும் வைத்துக் கொண்டுநுங்கம்பாக்கம் வீட்டில் பாதுகாத்தது அண்ணிதான்!

அண்ணாவின் குடும்ப அரவணைப்பு இல்லாமலிருந்தால் இல்வரையும் இழந்து நான் பித்தனாகியிருந்தாலும் ஆகியிருப்பேன்!!—மூவாயிரம்ரூபாய்க்கு மேல்செலவு எனக்கு அப்போது ஒருநாள்! என் நிலைஅண்ணாவுக்காத் தெரியாது ஆசுபத்திரிக்கு அண்ணா வந்தார் ...மூன்று நூறுரூபாய்நோட்டுகளை எடுத்து என்னிடம் கொடுத்தார்...

"நான் வெளியூர் போகிறேன்! வீட்டில் அண்ணியிடம் சொல்லியிருக்கிறேன், பணம் ஏதாவது தேவையென்றால் கூச்சப்படாதே பையன் முக்கியம், எவ்வளவு வேண்டுமானாலும்வாங்கிக்கொள் எப்படியாவது அவனைக் காப்பாற்று!" என்றார்.

அந்தச் சமயம் உண்மையிலேயே என் கண் கலங்கியது!! எனக்கும் அண்ணாவுக்குமுள்ள பாசத்தின் அளவை நான் எழுதிக்கொண்டே போகலாம, முடிவே கிடையாது அதற்கு! இப்படி முடிவேயில்லாத ஒரு பாசத்தை என்னிடம்மட்டுமல்ல, எல்லோரிடமும் காட்டக்கூடிய பண்பு பெற்றவர் அண்ணா. அவருடைய பெருந்தன்மையான குணம், சாதாரணமானதல்ல எந்தக் கட்சிதலைவரும் ஏன்? உலகிலேயே யாரும் பெற முடியாத அளவுக்கு ஒருகுடும்பப்பாசத்தை அவர் உருவாக்கியிருக்கிறாரென்றால் சாதாரணமானதல்ல!

உலக சகோதரத்துவம் காணப் பாடுபட்டார் இயேசு—நபிகள்—புத்தர்முதலியோர் சமயமாக அது உருமாறிற்று! ஆனால்அதைவிட மேலானதென்பேன். அண்ணா கண்டிருக்கிற சகோதரத்துவம் கட்சிகள் முளைக்கலாம்—பல கட்சிகள் அழியலாம்—ஆனால்இந்தச் சகோதரப் பிணைப்பினைதான் 'திராவிடநாடு' அலுவலகத்திலும் அண்ணா உருவாக்கியிருந்தார்!

ஒருநாள் என்னைப் பார்த்து அண்ணா கேட்டார். "ஏன்! அரங்கண்ணல் துணைக்கு யாரையாவது வைத்துக் கொள்கிறாயா?" என்று.

என்னைக் கேட்க வேண்டியதில்லை! அவர் சொன்னால் சரி!! இருந்தாலும் அண்ணா என்னைக் கேட்டார்...

(வளரும்)

வாணி தமிழ்-இங்கிலீஷ் போதினி



தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல் இங்கிலீஷ்படிக்கவும் பேசவும் கடிதங்கள்எழுதவும்கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரியபைண்டு புத்தகம் விலை ரூ. 5வி.பி.பி.செலவுரூ.1-25

வாணி தமிழ், இந்தி சுபோதினி

தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றி சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக்கொள்ளலாம். விலை ரூ, 2-25 வி.பி.பி.செலவு 85 ந.பை.

ஐசுவரியம் (குடிசைக் கைத்தொழில்)

சோப், இங்கி, ஊதுபத்தி, வாசனைத்தைலம், ஸ்னோ. பேஸ் பவுடர், சாம்பிராணி போன்ற 200 கைத்தொழில்கள் கொண்டது. விலை ரூ, 4. வி. பி. பி. செலவு 85. ந. பை

குடும்ப இலகு வைத்தியம்

வீட்டு சரக்குகளைக் கொண்டு நோய்களைப் போக்கி, ஆரோக்கியம், பலம், ஆண்மை பெறுவது போன்ற அநேக வைத்திய ரகசியங்களடங்கியது. தபால் செலவோடு ரூ. 3-50

வாணி புக் டிபோ, 3, மலைய பெருமாள் தெரு

(தபால் பெட்டி எண்: 239) சென்னை-1

அறப்போர்
ஆசிரியர்: அரங்கண்ணல்
ஒளி - 1 வெள்ளி 1-12-61 கதிர்- 40

தங்கத்துக்குச் செய்யும் துரோகம்!

தாலிச்சரடு! தாயத்து! மோதிரம்! மூக்குத்தி! கடையம்! கடுக்கன்! சங்கிலி! காப்பு! எதானாலும் தங்கம் தங்கம் என்று அலைகிறோம். தங்கத்தைச் சுமப்பதை வைத்தே 'தரம்'கூட மதிப்பிடப் படுகிறது.

வீட்டாரிடம் மட்டுமின்றி நாட்டின் 'நாணயமும்' தங்கத்தாலேயே மதிப்பிடப்படுகிறது. தங்கத்துக்கு இன்றுள்ளமதிப்புசாதாரணமானதல்ல! தன்னுடையபாங்கியில் எந்தளவுக்கு ஒரு நாடு தங்கம் சேர்த்து வைத்துள்ளதோ, அத்தங்கமே அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் அடையாளத்தை நிர்ணயிக்கிறது. நாட்டின் நிலையில் மட்டுமல்ல, உலகம் ஒப்புக் கொண்டிருக்கிற நாணயச் செலாவணிக்கான சின்னம் தங்கமே!

உலகத்தின் மதிப்பும் மரியாதையும் தங்கத்துக்கே!! இப்படி தங்கம் தங்கம என்று போற்றப் படும் தங்கம், தரைக்கடியிலிருந்து கைக்கு வருவது பெரிய கதை. ஆம்! நெஞ்சையுருக்கும் சோகக் கதையாகும்!!

பூமியன்னை மடிக்குள் புதைத்து வைத்திருக்கும் இத்தங்கத்தை வெட்டியெடுக்கும்போது மனிதன் மண்ணாகிறான். தங்கம் கலந்து கிடக்கும் ஒருபிடிமண்ணை அள்ளுவதற்கு ஓராயிரம் ஈராயிரம் அடிகளுக்குக் கீழே இறங்கும் ஏழை, எந்த நிமிடம் பூமி பிளந்து அதற்குள்ளேயே போய் விடுவானோ! சொல்ல முடியாது. பெற்ற குழந்தை, பெருமைக்குரியமனைவி வணக்கத்துக்குரிய பெற்றோர் ஆகியோரை விட்டுக் காலையிலே 'கனி'க்குள் இறங்கும் பாட்டாளி, மாலை வீடு திரும்பினால்தான் நிச்சயம்!

வருவாரோ, மாட்டாரோ, ஆண்டவரே!—என்று தன் கழுத்தில் கிடக்கும் தாலியைத் தொட்டுப் பார்த்தபடி தவிக்கும் அவர்தம் இல்லத்துத் தங்கங்கள். இப்படி ஒவ்வொரு விநாடியும் தன்னுருயிர்க் கணவரை இழப்போமா என்கிற அச்சமும் தன்னைநம்பிக் கிடக்கும் குடும்பத்தை அனாதையாக விட்டு விட்டு அடியிலேயே புதைந்து போய் விடுவோமோ எனும் சோகமும் உள்ளத்தில் அலையென மோதினாலும் உலகத்தில் வாழ்ந்து தொலைய வேண்டுமே, பாழும் வயிற்றைக் கழுவியாக வேண்டுமே!

வறுமையின்கோரம், மனிதனை மரக்கட்டையாகவே ஆக்கிவிடுகிறதன்றோ பல சமயங்களில்?

"தங்கம் தோண்டப்படும் 'கோலார்' சுரங்கத்தை ஒரு முறை பார்த்துவந்து விட்டால் ஒரு கடுகளவு தங்கத்தைக்கூட உடம்பில் நகையாகப் போட்டுக் கொள்ள மனம் வராது; பல உயிர்களின் வியர்வையையும் இரத்தத்தையும் சுடவைத்து திரட்டியதைப் போட்டுக் கொண்டிருப்பதுபோல, ஒவ்வொரு விநாடியும் மனந் துடிக்கும்" என்றார் கோலாருக்குப் போய்வந்த என்நண்பர் ஒருவர்!

உயிர்களைக் குடித்து 'மதிப்பு' பெறும் அத்தங்கத்தை வெட்டியெடுத்து வெளிக்கொணரப்பாடுபடும் ஏழைகள் ஏராளம், அவர்தம் ஆர்வத்தால், உழைப்பால், உறுதியால், மண்ணுக்குள் கிடக்கும் தங்கம் வெளியேவந்துபளிச்சிடுகிறது!

பளபளப்பைவைத்து மதிப்பை எடையிடும் இன்றையப் பொருளாதார உலகிற்கு நாட்டின் தரத்தையும் உயர்வையும் உண்டாக்கித் தருகிறார்கள் தங்கம் எடுக்கும் தரத்திர நாராயணர்கள்!!

ஆபத்தும் உயிர்ச் சேதமும் உண்டென்றுஅறிந்தாலும்அதை வெட்டியெடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது அங்கு. அழுகுரல்! பிணக்குவியல்! பேராபத்து இத்தனையும் உண்டென்றாலும், இருக்கும் தங்கத்தால் ஏற்றம் உண்டு நாட்டுக்கு என்பதால், எடுக்கப்படுகிறது.

இந்திய துணைக் கண்டத்திலேயே தங்கம் உள்ள இடம் தெற்குதான்! தென்னகத்திலுள்ள கோலார் சுரங்கங்களை யாரும் மறந்திட இயலாது!!

வெள்ளையக்கம்பெனியின்வசம் இருந்த இந்தச் சுரங்கங்கள் முன்னாள் முதல்வர் அனுமந்தையாவின் முயற்சியால் மைசூர் அரசின் தொழிலாக மாற்றப்பட்டன. இந்தச்சுரங்கங்களைப்பற்றி1·53ல் வந்த விபரத்தையறிந்தால் தென்னகத்தின் முக்கியம் தெரியும். அந்த விபரமாவது:

"இந்தியாவில் தங்க உற்பத்தியில் 90 சதவிகிதம் மைசூரிலிருக்கும் கோலார் தங்க வயல்களில் கிடைக்கிறது. இச்சுரங்கத்தின் தென்திசையில் உள்ள குப்பம் (சித்தூர் மாவட்டம்) தாலுகாவில் சமீபகாலங்களில் சொற்ப தங்கம் வெட்டியெடுக்கப்பட்டது.

1910-25ல் அனந்தப்பூர்மாவட்டத்தில் ராமகிரி அருகில் கொஞ்சம் கிடைத்தது, மலையாளத்தில் வயநாடுப் பகுதிகளில் அருவிகளில் மணலுடன் கலந்துகொஞ்சம் தங்கம் கிடைக்கிறது, நீலாம்பூர் ஜமீனில் பாறையுடன் கலந்த தங்கத்தை வெட்டியெடுக்க முடியுமா என்று ஆராய முயற்சிக்கப்பட்டது.

கோலார் வயல்களைதவிரமைசூரின் வடமேற்குப் பகுதியில் பல இடங்களிலும் முக்கியமாக தும்கார் மாவட்டத்திலும் வேறு ஐந்தாறு இடங்களிலும் தங்கம்இருப்பதாக 1944ல் தெரிவிக்கப்பட்டது

இந்திய துணைக் கண்டத்திலேயே எங்கு தங்கம் கிடைக்கிறது என்பதை இந்த விபரம் சொல்லும்! வெள்ளையன்ஆண்ட காலத்தில் உலகத்திலேயேபெரிய தங்க பூபதியாக பிரிட்டிஷ் அரசாங்கம் விளங்கியதென்றால், அதற்கு நம்முடைய கோலார் வயல்களும் காரணமாகும்!

அப்படிப்பட்ட தங்க வயல்கள் காங்கிரஸ் அரசின் சொந்தமானதிலிருந்து தங்கம் குறைந்து வருவதாகச் சொல்லப்பட்டு வருகிறது.

பூமியன்னையின் துரோகமல்ல, இதன் மூல காரணம்! எதையுமே நல்ல முறையில் நிர்வாகம் செய்ய காங்கிரஸ் அரசுக்கு திறமையில்லாதது ஒருபுறம்; தங்கம் வெட்டுவோரின் குறைகளைச் சரிவரக் கவனியாத நிலை இன்னொரு புறமாகும். இப்படி வெட்டியெடுக்கப்படும் தங்கத்தை மைசூர் அரசு வியாபாரம் செய்வதில்லை. அப்படியே டில்லியிடம் கொடுத்து விடுகிறது.

அப்படிக் கொடுத்துவிட வேண்டும் என்பதுதான் இன்றுள்ள சட்ட முறையாகும்!!

தங்கத்துக்கு இன்றுள்ள உலக விலை, ஒரு தோலாவுக்கு ரூ 66.62 புதுக்காசாகும்! மார்க்கெட் விலை தோலா ஒன்றுக்கு ரூ. 130.50 புதுக்காசாகும்!!

வெட்டியெடுத்து விடும் தங்கத்தை மார்க்கெட் விலையான ரூ. 130 சொச்சத்துக்கு விற்றால், மைசூர் அரசுக்கு நிறைய இலாபம் வருமல்லவா.

வாணிப பேரம்தான் நடத்த முடியாதே! அதனால் உலக விலை போட்டு, எல்லாவற்றையும் டில்லிக்குக் கொடுத்துவிடுகிறது!! அப்படிக் கொடுப்பதால் தங்க வயல்களை நிர்வாகம் செய்வதில் நஷ்டம் வருமல்லவா. அந்த நஷ்டத்தை ஈடுசெய்யடில்லி, 'மான்ய தொகை' அளித்து வருகிறது.

தங்கம் இருப்பது கோலாரில்! தன்னுயிரையும்மதியாது வெட்டியெடுப்பவர்கள் தமிழரும் கன்னடியரும்!! வாழ முடியாது வறுமைக்கு ஆளான ஆதிதிராவிடப் பெருங்குடியினரே. கனிகளில் இறங்கும் கடினமான தொழிலைச் செய்வோர் தமிழகப் பகுதியிலிருந்து சென்று வசிப்போரே. தங்கம் பெருமைக்குரிய தென்பதால், தாலிகள் பல அறுமென்றாலும் சகித்துக்கொண்டு மைசூர் அரசு மண்ணுக்கடியிலிருந்து தங்கத்தைக் கொண்டு வருகின்றது! உரிய விலைகொடாமல் தட்டிப் பறித்துக்கொண்டு பிச்சைக்காசு போட்டு வருகிறது டில்லி!!

இப்போது,

அந்தப் பிச்சைக்காசும் தருவதற்கில்லை! என்று டில்லி மாநில அரசு தாக்கீது அனுப்பியிருக்கிறது.

"தராவிடில்! நாங்களென்ன செய்வோம்? நஷ்டப்பட்டுக் கொண்டு நடத்த ஏது எங்களிடம் பணம்? வயல்களை மூடி விடுகிறோம்!!"

என்று கன்னட அரசு, பதிலளித்திருக்கிறது, நேருவுக்குக் கட்டுப்பட்ட நிலையல்லவா! அதனால், "தங்கம் தரோம்!" என்றுமறுக்க முடியாமல் குழைவும் பயபக்தியும் கலக்கக் கும்பிடும் பாணியில்தெரிவித்திருக்கிறது!!

"உன்னால் நடத்த முடியாதா! ரொம்பச் சரி, மத்ய சர்க்காரான எங்களிடம் ஒப்படைத்துவிடேன்!!"

என்று கொஞ்சங்கூட மனம் கூசாமல் கேட்டிருக்கிறது டில்லி. உலகமே போற்றும் தங்கம்—இந்தியாவிலேயே தென்னகத்தில்தான் கிடைக்கிறது—அதிலும் கோலாரில்தான் அதிகம் கிடைக்கிறது — அப்படிப்பட்ட தங்கம் எடுக்கும் தொழிலை தங்களிடம் தந்துவிடச்சொல்லி தாக்கீது அனுப்பியிருக்கிறது, டில்லி!

தேசியம் பேசிடும் திருவாளர்களே! செப்புங்கள், நீவீர்? மாநிலங்கள் வாழவேண்டுமென். இற அக்கரை உள்ளபடியேடில்லி ஏகாதிபத்தியத்திற்கு இருக்குமானால் மாநிலத்தில் நீடித்துவரும் ஒரு தொழிலுக்கு உதவி செய்து போற்ற வேண்டியதுதானே முறை.

நன்றாக நடக்கிறது ஒரு தொழில்!

இலாபத்தோடு நடக்கிறது!

அத்தொழிலால்தன் நாட்டுஉற்பத்தி பாதிக்கப்படுகிறது; அல்லது;

அந்த தொழிலால் தனக்கு இலாபம் வரும்!—என்று கண்டால், எப்படியாவதுஅத்தொழிலை மிரட்டி அடக்கி, நடக்கவொட்டாமல் சக்தியில்லாதத்தாக்கி தன் வசம் சரணாகதியடையுமாறு

10—ம் பக்கம்

கொக்கரிக்கும் அளகேசன் குப்புறவிழுவார்!

"விஷயம் தெரியுமோ! போன தடவை சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ராமதாசை நம்பி விட்டதில் சென்னை மேயர் தேர்தலில் ஜெயிக்கமுடியாமற்போயிற்று என்று இந்தத் தடவை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் அளகேசனே, எல்லாக் காரியங்களையும் நேரில் நின்று கவனிக்கிருர். நிச்சயம் தி. மு. க. தோற்கப்போகிறது பாருங்கள்!!"

"டில்லியிலே காமராஜு சம்பத் பேசி விட்டார்கள்! சம்பத்தென்ருல் சாதாரணமா? இப்போ அவர்மனசு வைக்கிற கட்சிதான் வெல்லும்,

காமராஜ்-பெரியார் சம்பத் கூட்டுச் சதிக்குத்தோல்வி

அவரிடம் ஏழுபேர் இருக்காங்கஏழு பேர்! அந்த ஏழுபேருக்கு வழி காட்ட இதோ டில்லியிலிருந்துவரப் போகிருர் அவர்."

"சார்! பெரியாருக்குக்கூட இந்த மேயர் தேர்தலிலே ரொம்ப அக்கரைன்னு பேசிக்கிருங்க, எப்படியாவது இந்தக் கண்ணீர்த்துளிங்க வராமெச் செய்யனும்கிருராம்."

*　*　*

பலவிதமான உரையாடல்கள்! பரபரப்பு! ஆவல்! எல்லாம் காட்டப்பட்டது, இத்தடவை மேயர் தேர்தலில் கழகத்தில் ஏற்பட்ட பிளவு காரணமாகப் பிரிந்துவிட்ட ஏழுபேரை வைத்துக்கொண்டு, 'இடமா வலமா, எது லாபம்?' என்று ஜாதகம் கணித்துக் கொண்டு இருக்கிருர் சம்பத்— அளகேசன் அவரை வட்டமிடுகிருர்—காமராசர் முன்னமேயே கண்ணடித்துவிட்டார் — என்ன ஆகப்போகிறது பாருங்கள், இந்த தி. மு. க. என்று பேசினுர்கள் காங்கிரஸ்காரர்கள்.

தி. மு. கவிலிருந்த ஜீவரத்தினம் கூட இல்லை இப்போது— எப்போதும் ஆதரிக்கும்சுயேச்சை தோழர்களைக்கூட 'கண்ணி' வைத்துப் பிடிக்கஎல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டோம் என்று காங்கிரஸ மாளிகைக்குள் பேசிக் கொள்ளப்பட்டதாகச் சேதிகள் வந்தன! என்ன செய்யமுடியும்? ஆறு கம்யூனிஸ்டு தோழர்களுடைய ஓட்டுதனக்குத்தான் என்று நம்பியிருக்கிறது தி.மு.க.—ஆறு பேரில் இரண்டுபேர் விவசாயிகள் அறப்போரின் காரணமாகச்சிறையிலே கிடக்கிருர்கள்—

ஆறில் இரண்டு போனுல் நாலு ஆகாகா!! என்றுஆனந்தபட்டது 'விடுதலை' வட்டாரம்தெரியுமாசேதி கிருஷ்ணமூர்த்தி என்கிற கம்யூனிஸடு அனுதாபியான கவுன்சிலர் முதலமைச்சர் காமராசரை பேட்டி கண்டு பரோலில் அந்த இரு கம்யூனிஸ்டு கவுன்சிலர்களையும் தேர்தலில் கலந்துகொள்ள விடுமாறு கேட்டாராம்—என்ன பதில் சொன்னுராம் தெரியுமா முதலமைச்சர்?

"அதெப்படிய்யா! அவுங்க எங்களுக்கு ஓட்டுப்போட மாட்டாங்கன்னு தெரிஞ்சும் விடுவோம்னு நினைக்கிறீங்க?" என்று மேதா விலாசத்துடன் பதில் தந்துவிட்டாராம்.

என்னயிருந்தாலும் காமராசர்னு காமராசர்தான் என்று கன 'குஷி'யோடு பேசிக் கொண்டார்கள் அவர்கள்!!

ஒரே குழப்பம்...ஆர்வம்—இந்த ஒரு தேர்தலோடு தி. மு. க. அழிந்துவிடும் என்பதுபேலே அர்த்தமில்லாத ஆரவாரம் — இத்தனையும் காட்டப்பட்டது, எதிர் முகாமில். இரண்டு நாளைக்கு முன்பே நகர நல முன்னணியின

ரும் காங்கிரசாரும் சென்னையைய அடுத்தப் புழலேரியில் போய் தங்கி வரப்போகும் மகிழ்ச்சிக்கு அச்சாரமாக விருந்துகள் நடத்திக் கொண்டிருக்கிருர்கள்!

"அய்யா, அய்யா! அடியேன் எனக்குதான் டெபுடி மேயர் வரப் போகிறது. உங்கள் ஆசீர்வாதம் தேவை" என்று ஒரே ஒரு உறுப்பினராக விளங்கும் திராவிடகழக கவுன்சிலர் ஒருவர் உச்சரித்துக் கொண்டேயிருந்தாராம். இப்படி யூகங்கள், ஆருடங்கள், உபசாரங்கள் அத்தனையும் இத்தடவை இருந்தன! நிச்சயம் நாம் வெல்ல முடியாது என்று கழக தோழர்களில் சிலர்கூடக் கருதியதுண்டு!!

ஆனுல் இச்சகம் பேசியேவாழ விரும்புவோர் மனம்வாட கொக்கு மனம் கொண்ட குறுமதியாளர்கள் முகம்நாண கோணங்கிதன செய்வதே அரசியல் வாழ்வெனக் கருதியிருக்கும் ஆத்மாக்கள்பதற இம்முறையும் திராவிட முன்னேற்ற கழகம் வென்றுவிட்டது. பணிவும் பக்குவமும் கழகத்துக்கென எந்த கஷ்ட நஷ்டங்களானுலும் ஏற்றுக்கொள்ளும் திடவலிவும் கொண்ட தோழர்கள் குசேலரும் வேதாசலமும், மேயர் துணைமேயராக வெற்றி பெற்றிருக்கிருர்கள்.

காமராசர் கண்ணடிப்பு—அய்யாவின் மறைமுக வேலைகள்— சாணக்கியரென எண்ணிக் கொண்டிருக்கும் சம்பத்தின் மூளை

மேயர்தேர்தல் தரும் பாடம்

லம்—இத்தனையையும் தாண்டி இம்முறை தி. மு. க. வெற்றி பெற்றிருக்கிறது!

இந்த தேர்தலில் திராவிட முன்னேற்றக்கழகம் தோற்று விட்டால் அதை வைத்து நன்ருகப் பிரச்சாரம் செய்யலாம் அடுத்து வரும் தேர்தலில் ஒருகை பார்க்கலாம் என்று தப்புக் கணக்குக் கூடப் போட்டாராம் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்! அத்தலைவரின் 'தலை'யான காமராசர்கூட ஆவலும் அக்கறையும் எடுத்துக் கொண்டாராம், இம்முறை!

ஆனுல் அவையாவும் தோற்கடிக்கப்பட்டு தீராவிட முன்னேற்றக்கழகம் வென்றிருக்கிறதென்ருல் அதற்குள்ள காரணம் கழகம் கார்ப்பரேஷனில் காட்டிவரும் பணிவும் அன்பும் கடமையுணர்ச்சியும்தான்.

சம்பத் மட்டும் தன் வீட்டில் தோழர்கள் முருகேசன், சம்பந்தம், ரங்கனுதன், குமாரசாமி. மணிவண்ணன் ஆகியோரைப் பூட்டி போட்டுவிட்டுப் பேர்காதீர் என்று கெஞ்சியபடியே இல்லாதிருப்பாரானுல் அந்த ஓட்டுகள் கூட நமக்குக் கிடைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை!

அந்தளவுக்குச்சகிப்புத்தன்மையும், எல்லோருக்கும் அன்பு காட்டும் பெருந்தன்மையும் கொண்டு தி, மு. க.விளங்குகிறது சென்னை நகராட்சியில். எந்த எதிர்க்கட்சிக் கவுன்சிலர்களைப் போய்க் கேட்டாலும் மனமுருக நமது மேயர்களைப் பற்றிப் பேசுவார்களே தவிர, ஒருவராவது அதிருப்தியடைய முடியாது. அந்த வகைகுல் பாரபட்சம் காட்டாது சென்னை மக்களுக்கான நன்மைகளைக் கட்சிபேதம் பாராமல் நாம் செய்து வருகிருேம்!

"அவனு? அவன் தி. மு. க. அந்த தி. மு. க, எம். எல். ஏ! வாகயிருக்கும் தொகுதியா? சேச்சே!!" என்று காங்கிரஸ் அரசு புறச்கணிப்பது போன்ற இழிதன்னமையை நமது சென்னை நகராட்சியில் காண முடியாது.

உண்மையில் நாம் பதவியேற்ற இந்த மூன்றரையாண்டுகளிலும் என்னென்ன நன்மைகள் செய்திருக்கிருேம் என்று எண்ணிப் பார்த்தால் மனம் பூரிக்கும்! முதல் முறை மேயராக வந்த அ. பொ. அரசு, அடுத்தபடியாக வந்த வாலிபர் அப்துல் காதர், முன்னுள் மேயர் முனுசாமி ஆகிய ஒவ்வொருவரும் ஏழைபங்காள மேயர்களாகயிருந்தவர்கள் என்கிற பெயரைப் பெற்றவர்கள்! அதே போலத்தான் துணைமேயர்களாகயிருந்த சிவசங்கரன், தேவராசன்,செல்வராசு ஆகியோரும்!!

ஆடம்பரம், பிடிவாதம், சுயநலம் இவையே மேயர் பீடத்தின் தன்மைகளாகயிருந்த நிலைமாறி, ஏழையும் பாழையும் திறமைசாலிகளான எவரும் எந்தப் பதவியிலும் இருக்கலாம்—என்கிற புது நெறிக்கு குவித்திட்டது, திராவிட முன்னேற்றக் கழகமாகும்.

அந்த திராவிட முன்னேற்றக் கழகம் எத்துணை தந்திர சாகசங்கள் செய்யப்பட்டாலும் வெல்லும் என்பதன் அறிகுறியே இந்த வெற்றி. அளகேசனுர் ஆர்ப்பரித்தாலும் அய்யா பெரியார் அவர்கள் சங்கு ஒதினுலும் சம்பத் சலசலப்புக் காட்டினுலும் வரும் பொதுத்தேர்தலில் கழகம் வெல்லும்!

கர்ச்சனை எழுப்புகிருராம் தோழர் அளகேசன், காஞ்சி வட்டம் சென்று. அவர் பேசினுலே, தமிழ் நாறும்! கர்ச்சனையே எழுப்புகிருர் என்ருல் எப்படியிருக்கும் என்பதை காஞ்சி மக்கள் நன்கு அறிவர்!!

வாய் என்பது நல்லதைச் சொல்ல அமைந்தது என்பதைச் சமீபகாலமாக நண்பர் அளகேசனுர் மறந்துவருகிருர். அடடா! யாரைப் பார்த்தாலும் எங்கு போனுலும் ஒரே சவால்தானும். இரு தினங்களுக்கு முன்புகூடக் காஞ்சியில் பேசினுராம், "தோன்றிய இடத்திலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தைக் குழிதோண்டிப் புதைக்கிறேன்" என்பதாக.

அவர் பேசிய மறுதினம்தான் அவருடைய ராஜதந்திரத்துக்குக் குழிவெட்டப்பட்டிருக்கிறதுசென்னையில்!

*

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டே என் அனுமதியின்றி உள்ளேபோய் இடத்தில்அமர்ந்து விட்டாள்.

அன்று வகுப்பில் நான் சிலசிக்கலான கேள்விகளைச் கேட்டேன் அவளிடம். அவள் விழித்தாள். நான் அதட்டினேன்; அவள் சிரித்தாள்.

"இங்கே சொல்ல மாட்டேன். சாயந்திரமா வீட்டில் வந்து பதில் சொல்றேன்னு சொல்லேண்டி." என்று பக்கத்தில் அமர்ந்திருந்த பெண் அவளது காதைக் கடித்ததுஎன் செவிகளிலும் விழாமல் இல்லை!

நாட்கள் ஓடின!

நான் நடத்திய பாடங்களில் அத்தியாபங்கள் மாறுவது போலவே எங்கள் இருவரின் தொடர்பிலும் புதிய அத்தியாயங்கள் ஏற்பட ஆரம்பித்தன!

நான் அவளுக்குச் சொல்லிக் கொடுத்தது கல்லூரி வகுப்பறையில்!

அவள் எனக்குச் சொல்லிக் கொடுத்த புதிய பாடங்கள்—எங்கள் இருவரது வீட்டின் சன்னல்களுக்கிடையே!

"பக்கத்து வீட்டுப் பாரிஜாதமே!"என்றுதுவங்கும்பாடல் ஒரு நாள்என் மூக்கை .உடைதது அல்லவா? ஆனல் இப்போதெல்லாம் அவள் திருப்பி திருப்பிப் பாடச் சொல்கிருள், என்னை!

பொழில் ஏட்டுக்கு நான் நன்றி தெரிவித்தேன். ஆயுள் சந்தா ஒன்றையும் அந்த ஏட்டுக்கு அனுப்பி வைத்து விட்டாள் பாரிஜாதம்.அடுத்த மாதமேஅந்தஏடு இருந்த இடம் தெரியாமல் போய் விடும் என்று முன்பே அறியாத காரணத்தால்!

ஒருநாள் ... நான் வீட்டில் அமர்ந்து மறுநாள் பாடம் நடத்த என்னை தயார் செய்து கொண்டிருந்தேன்.

அப்போது "குட் ஈவினிங், சார்!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தார் பக்கத்துவீடடுப் பாரிஜாதத்தைப் பெற்ற பாரிஸ்டர் பாலு முதலியார்!

நான் பதறிப்போய் விட்டேன், "வாருங்கள், வாருங்கள்!" என்று எழுந்து உபசரித்து அமரச்செய்தேன்.

அவர் எதற்காக இங்கு வந்தார்? தன் மகளுடன் நான் நடத்தும் நாடகம் தெரிந்து அதைக் கண்டிக்க வந்திருக்க மாட்டார் என்று மட்டும் நிச்சயமாகதெரிந்தது, ஏனெனில் அவருடைய முகத்தில் வலுக்கட்டாயமாக சிரிப்புவரவழைக்கப்பட்டிருந்தது!

"மன்னிக்கணுங்க, வேலைக்காரங்க யாருமில்லே; காபி, கீபி வாங்கிட்டு வர முடியாம இருக்கேன்!" என்றேன் கூனிக் குறுகிக் கொண்டே!

அதனல் என்ன; பிரம்மச்சாரியாஇருந்தாலே இந்ததொல்லை தான்! நான் பாரிஸ்டர் ஆனதுக்கு முந்தியே 'ஹஸ்பெண்ட்' என்ன...நீங்களும் சீக்கிரமா ஒரு கல்யாணத்தை நடத்திப்போட்டா தீர்ந்தது!" என்ருர் அவர்.

நான் ஒரு அசட்டுச் சிரிப்பை உதிர்த்தேன்.

"என் டாட்டர் இருக்காளே பாரிஜாதம், அவள் உங்களைப் பத்தியெல்லாம் நல்லா சொல்லியிருக்கா!" என்ருர்அவர்.

இந்த 'முகஸ்துதி' எதனுடைய அஸ்திவாரம் என்று என்னல் முன்கூட்டியே யூகித்துக்கொள்ள முடியாவிட்டாலும் ஏதோ ஒரு நல்ல முடிவின் ஆரம்பம் என்று மட்டும் உணர்ந்து கொண்டேன்! அவர் மேலும் பேச ஆரம்பித்தார்.

"அவள் விஷயமாகதான் பேச வந்தேன்..."

"ஓ எஸ் ... பேசுங்களேன்! உங்க பெண் மஹா புத்திசாலி! படிப்பிலே இப்படி ஒரு சூட்டிகையான பெண்ணை என் இரண்டு வருட ஆசிரியர் வேலையில் நான் பார்த்ததேஇல்லே, போங்களேன்! கவிதைகள்கூட இயற்றுகிருள், அற்புதமான கலையுள்ளம்! பிற்காலத்தில் ஒருசரோஜினி நாயுடா, பேரில் பக்கா வந்தாலும் ஆச்சரிமில்லே!"

"பின்னே என்ன; என் 'டாட்டர்' இலலியா அவள்? இப்போ நான் வந்தது எதுக்குன்னு... அவளுக்கு இந்த வருஷம் கல்யாணம் செய்துடலாமுன்னு ஒரு உத்தேசம்!

"சபாஷ்! நல்ல ஐடியா...நிச்சயமா செய்துட வேண்டியது தான்!"

"அதனலேதான் உங்ககிட்ட அதுபததி பேசிட்டுப் போகலாமின்னு வந்தேன்..."

எனக்கு 'ஷக்' அடித்தது போல இருந்தது. பாரிஜாதம் திருமணம்பற்றிஎன்னிடம் பேசுவதா? ...சரிதான் பாரிஜாதம் உண்மையை ரொம்ப ஆணித்தரமாக தன் தந்தையிடம் சொல்லிவிட்டாள் போலும்! பாவம் இந்த தந்தைதான் என்ன செய்வார், ஒரே பெண், அவள் விருப்பத்தை மீற முடியுமா?

"நீங்க நல்லா படிச்சவர். பாரிஜாதத்து மேலே உங்களுக்கு ரொம்ப அன்பும் உண்டு, அதனல்தான்..."

அவர் தயங்கி தயங்கிப் பேசினர். என்ன மனிதர் இவர், கரும்புத்தின்ன கூலியா வேண்டும்? கல்லும், முள்ளும் இல்லாத'கான்கிரீட்' பாதையாக என் காதல் பாதை மாறுகிறதே என்ற குதூகலத்தில் நான் மிதக்கிறபோது, இவர் ஏன் இப்படி சுற்றி வளைத்துப் பேசுகிருர். "ஓய் மாப்பிள்ளை, இந்தாய்யா தாலி! கட்டுய்யா என் மகள் கழுத்திலே!" என்று 'கலியுக மாமனராக'கட்டளையிடாமல் இப்படியா மருமகனை முன்னலேயே 'காக்காய்' பிடிப்பது? அவர் மறுபடியும் பேசினர்.

"என்னடாஇது. இப்படிவந்து திடீர்னு சொலரேன்னு ஒன்றும் தவறு நினைக்கக்கூடாது..."

"நல்லாச் சொன்னீங்க! அப்படியெல்லாம் ஒன்னுமில்லீங்க!... நீங்க சும்மா சொல்லுங்க!"—இது நான்.

"உங்களுக்கு நிறைய நண்பர்கள் இருப்பாங்களேன்னுதான் உங்ககிட்டே வந்தேன்...யாராவது ஒரு ஐ. ஏ. எஸ். அல்லது ஒரு ஐ. பி. எஸ். பாஸ் பண்ணின பையன் இருந்தா சொல்லுங்களேன்—அது என் ஆசை! என் பெண் பொறந்தவுடனேயே நான் செஞ்ச முடிவு இது!"

'மெகடான் பாமே' என் தலையில்விழுந்து வெடித்ததைப்போல நான் நிலைகுலைந்தேன் மகளைத் தாரமாக்க வந்தார் என்று நினைக்க அவர் என்னையே தரகராக அல்லவா ஆக்கிவிட்டார்? இந்த நெருப்பைத் தூக்கி எறியத்தானு அவா இவ்வளவு தூரம் பீடிகைப்போட்டார்? நான் வாயடைத்து—கண்ணடைத்து—மூச்சடைத்துப் போய்விட்டதாக உணர்ந்தேன்.

'நீங்க தப்பா நினைக்கப்படாது! வியாபகம் உள்ளவராச்சேன்னு சொன்னேன். அதுவுமில்லாம பாரிஜாதம் வேறே உங்களைப்பத்தி யதான் வீட்டுலே பேசிக்கிட்டிருக்கா!...நான் வரட்டுமா...? கவனம் வச்சிக்குங்க...!' என்று சொல்லிக் கொண்டே அந்த மனிதர் புறப்பட்டுச் செல்ல நான் எந்த விதமான பதிலும் பேசவில்லை.

*   *   *

இதை நான் பாரிஜாதத்திடம் சன்னல் வழியாகச் சொன்ன போது அவள் அதிர்ந்தே போனுள்.

'என்ன பாரிஜாதம்! நான் இந்த எம். ஏ. பட்டத்திற்கு என்ன பாடுபட்டிருப்பேன், தெரியுமா? அது ஒரு கல்யாணத்திற்குக்கூட உதவாதது, பட்டதாரிகள் சமுதாயத்திற்கே இழுக்கு! சீ...சீ...!' என்று சலித்துக்கொண்டேன்.

'எம். ஏ. மட்டுமா? எல்.டி.யை மறந்துட்டீங்களே!' என்று 'நல்ல நேரத்தில் நினைவுப்படுத்தினுள் பாரிஜாதம்!

அதற்குப் பிறகு என்ன செய்வதென்று யோசித்தோம். அந்த நீண்டநேர யோசனையில் மிஞ்சிய முடிவெல்லாம், எங்கள் வீட்டு சன்னலில் எட்டு இரும்புக் கம்பிகள் இருப்பதைக் கண்டுபிடித்தது தான். கிட்டத்தட்ட ஆயிரம் முறைகளுக்குமேல் திரும்பத் திரும்ப எண்ணியிருப்பேனே!

ஆனல் பாரிஜாதமோ,

'எங்கள் அப்பா ஒரு முரட்டுப் பிடிவாதக்காரர்! தான் பிடித்த முயலுக்கு கால்களோ இல்லை என வாதாடி எதிரிகளை ஒப்புக்கொள்ளச் செய்யும் 'சாந்த சொரூபி' என்றெல்லாம் பயமுறுத்தி 'ஆகட்டும், பார்க்கலாம்' என்று சொல்லிவிட்டு கீழே போய்விட்டாள், தான் திருமலைப்பிள்ளைத் தெருவில் குடியிருப்பதை மறக்காமல்.

*   *   *

அதற்குப் பிறகு பாரிஸ்டர் பாலுமுதலியார் தினமும் என் வீட்டுக்கு வர ஆரம்பித்தார். நான் கல்லூரியைப் போலவே அவரது 'அட்டன்டன்சை' யும் வீட்டில் எடுத்துக்கொண்டிருந்தேன்.

ஒருநாள் அதிகாலையில் அன்றைய செய்தித் தாளுடன் என் வீட்டுக்குள் ஓடிவந்தார் அவர்.

'பார்த்தீர்களா? இன்றைக்கு பேப்பரில் ஐ. ஏ. எஸ். பரீட்சை முடிவுகள் வெளிவந்திருப்பதை? இதிலே ஒருவரை நம் மாப்பிள்ளையாகப் பிடித்துவிட்டால் என்ன?' என்று பரபரப்புடன் சொன்னர், பறவையைக் கண்டவுடன் சுடுவதற்குத் துடிதுடிக்கும் வேட்டைக்காரனைப்போல!

நான் அந்த அவசரத்திற்கு அணையிட எண்ணி, 'இதிலே பெயர்தானே இருக்கும்; விலாசம் கண்டுபிடிப்பது சுலபமில்லையே!' என்றேன் .

'அதெல்லாம் நான் கண்டு பிடித்துவிட்டேனே! இதிலே முதல் 'கிரேட்'டிலே பாஸ் பண்ணியிருக்கிற பையனின் விலாசம் கிடைத்துவிட்டது! இந்த ஊரிலேயே தங்கசாலையிலே இருக்கிருனும்; இன்றைக்கு சாயந்திரமே அந்தப் பையனுட அப்பாவை 'அப்ரோச்' பண்ணிடனும்! என்ன?—சரிதானு?' என்று கேட்டுக் கொண்டே வந்த அவர் கடைசியில் ஒரு திடுக்கிடத்தக்கச் செய்தியையும் சொன்னர்; 'மறந்துடாதீங்க; சாயந்திரம் நீங்களும் என் கூட வரணும்!'என்ருர்.

இந்தக் கொடுமை வேறு எந்தக் காதலனுக்காவது வருமா? அம்பிகாபதியும், சலீமும் அவதரித்த மண்ணிலேயா அபாக்கியவானகிய நான் பிறக்க வேண்டும்? இழுக்கு..... காதலுக்கே பேரிழுக்கு!

'இதை உங்க பெண்ணுக் கிட்டே சொல்லிட்டீங்களா?'

'சொல்லிட்டேனே? அதெல்லாம் நான் 'கரெக்டா' நடந்துக்குவேன்!'

(11-ம் பக்கம்)

உங்களது
தேவைக்கு
V. G. பன்னீர்தாஸ் & கோ.
சைதாப்பேட்டை ரயில்வே ஸ்டேஷன் எதிரில்
போன்: 88084 சென்னை-15
பிராஞ்சு:
மாம்பலம் ரயில்வே ஸ்டேஷன் எதிரில்
27, ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை-17

சுலபமானது
தவணைகளில் வாங்குவது
[சென்னை வாசிகளுக்கு மட்டும்]
மர்பி, நேஷனல்-எக்கோ, ஜி. இ. ஸி. ரேடியோக்கள் மற்றும்
சைக்கிள், கைக்கடிகாரம், வால் கிளாக, மின்சார விசிறி, தையல் மிஷின் முதலியன
• எளிதில் வாங்க விசேஷ சலுகைகள்
• விரும்பும் மாடல்களில் உத்திரவாதத்துடன் கிடைக்கும்

murphy radio
Delights the home!

ஊழலோ, ஊழல்!

...நமது சர்க்காரின் ஐந்தாண்டு திட்டத் தயாரிப்பாளர்களுக்கு இதர எல்லாம் உண்டோ என்னவோ தெரியாது—ஆனால் அவர்களுக்கு விஞ்ஞானப் புத்தியும் தூரநோக்கும் மட்டும் சுத்தமாய்க் கிடையாது என்பதை மட்டும், அவர்கள் படைத்துள்ள 5 ஆண்டு திட்டங்களே நிரூபித்து விட்டன. முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் எப்படியோ கஷ்டப்பட்டுக் காலமாகி விட்டது.

2வது 5 ஆண்டு திட்டம் பிறக்கும்போதே தாய்ப்பாலை வற்ற விட்டுப் பிறந்தது அதற்கு வாங்கி ஊட்டும் விலைப்பாலுக்கு பெற்றோரிடம் பணவசதி கிடையாது. ஆனால் பிறந்த திட்டத்தின் வேகத்தைப் பார்த்தால் அதை வளர்ப்பதற்கு எந்த அந்நியன் பணம் தரக் காத்திருக்கிறானோ தெரியவில்லை! எந்த வெளிநாட்டுக்காரனும் பண உதவி செய்ய முன்வராவிடில், நமது அருமைச் செல்லக் குழந்தையான 3வது ஐந்தாண்டு திட்டத்தின் கதி என்ன வாகுமோ. இதைப்பற்றி திட்ட

✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲

'கண்ணகி'

✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲

கர்த்தாக்கள் யோசித்ததாகத் தெரியவில்லை. அவர்கள் யோசிக்கவும் மாட்டார்கள்! ஏனெனில் அவர்களிடம்தான் துரதிருஷ்டிக்குப் பஞ்சமாயிற்றே!

இதுவரை போட்ட திட்டங்களெல்லாம் வரையறுக்கப்பட்ட தொகையிலிருந்து 300—400 சதவிகிதம் அதிகம் சாப்பிட்டுவிட்டன. அதாவது 100 ரூ செலவு ஆகும் என்றால் லட்சம் ரூபாய் ஆகி இருக்கிறது.

உருக்கு உற்பத்தித் தொழிற்சாலைகளுக்கு திட்டக்கமிஷன் வரையறுத்த தொகை 425 கோடி.

ஆனால் அத்தொழில் இன்னம் முடியவில்லை. முடியுமுன்பே 750 கோடிகள் தீர்ந்து விட்டன.

பக்காரா அணைக்கட்டுக்கு 11 கோடி செலவாகும் என்பது திட்டக்கமிஷனின் திட்டம். ஆனால் அந்த அணை 37 கோடியைச் சாப்பிட்டு விட்டது.

சாப்பிட்டுத் தொலையட்டும், பயன் என்ன? என்றால் அதற்கும் கையைப் பிசைகிறார்கள் இதே மாதிரி எல்லாவற்றிலுமே மோசம் தான் புத்திக்குமுடைப்பட்டவர்கள் செய்கிற செயல்களில் பலன் எப்படிக் கிடைக்கும்?

நமது திட்டத் தயாரிப்பாளர்களுக்காக இயற்கையும் நொண்டியாகிவிட வேண்டும். அல்லது அவர்கள் தமது செயல்களை அடக்கிக்கொண்டு சும்மா இருக்க வேண்டும்.

அதாவது: அதிக மழை பெய்யாமலும் வெள்ளப்பெருக்கு ஏற்படாமலும் இருக்க வேண்டும்! இல்லாவிட்டால் நமது அணைகள் கட்டி முடிந்தவுடனேயே வாயை பிளந்துவிடும்!

ஆகவே நமது திட்ட கர்த்தாக்களுக்காக கடவுள்தான் உதவி செய்ய வேண்டும் அந்த லட்சணத்தில் இருக்கின்றன அவர்கள் தயாரித்த அணைகளும், இதர தொழிற்சாலைகளும்.

பனு அணை வாயைப் பிளந்து படுநாசத்தை ஏற்படுத்திய ஒரு சம்பவம் போதாதா நமது திட்டமேதைகளின் புத்தியை திரை தூக்கிக் காட்ட?

இயற்கையின் சீற்றங்களை, விஞ்ஞான ரீதியில் எதிர்த்துச் சமாளிக்க வேண்டியவர்கள் இயற்கையைக் கெஞ்சிக் கொண்டிருந்தால் இவர்கள் நாடு காப்பவர்களா? நாட்டை நாசமாக்குகிறவர்களா? இவர்களுக்குக் கொடுக்கும் சம்பளமும், அதிகாரம், இதர வசதிகளும் விஞ்ஞான மூளைக்கேயன்றி கடவுளைக் கெஞ்சுவதற்கல்ல!! கடவுளிடம் முறையிட இந்த பச்சை வெட்டு விஞ்ஞானிகள் தேவை இல்லை. அதை சாதாரண மனிதனே பார்த்துவிடுவான்.

பூனாவில் ஒரு அணை கட்டினார்கள். எந்த வெள்ளத்தையும் கட்டுப்படுத்திவிடும் அளவுக்கு கட்டி இருப்பதாய் கையை ஓங்கிப்பேசினார்கள், இவர்களைச் சோதிக்கவோ என்னவோ இயற்கைக்குக் கோபம் பொங்கி விட்டது, ஒரே மழை — அதைத் தொடர்ந்து வெள்ளம் பலமுறை அணி எடுத்து இவர்கள் கட்டிய பூனா அணையில் சங்கமித்தது அணையின் சக்தி சாதாரண வெள்ளத்துக்கே இப்பாற்பட்டது. ஏக வெள்ளம் பெருகியவுடன் அணையால் தாளவில்லை—வாயை பிளந்து விட்டது —எங்கும் வெள்ளக்காடு-பார்த்தோமே நாசத்தை! நாம் என்ன செய்தோம்? திட்ட கர்த்தாக்கள் எங்கே? உடனே வெள்ள நிவாரண நிதிக்கு கையேந்துகிறோம். அணை கட்டவும் மக்கள் பணம் கொடுக்கிறார்கள். கட்டிய அணை உடைத்துக்கொண்டு வெள்ளம் பெருகினால் அதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவும் மக்கள் தான் பணம் கொடுக்கிறார்கள்! இதுதான் நாட்டாண்மையா?

மற்றொரு கொடுமை — அல்ல அல்ல—புத்தியீனத்தைப் பாருங்கள்:

பக்ராநங்கல் அணைக்கட்டி இருக்கிறார்களே அது எந்த இடத்தில் தெரியுமா?

பாகிஸ்தான் விடுகிற மூச்சுக்கூட நம்மீது வந்து உரசுகிற இடம்! அதாவது பாகிஸ்தான் எல்லை ஓரம்! இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் உள்ள எல்லைக்கு மிக நெருங்கிய இடத்தில் கட்டி இருக்கிறார்கள் பக்ராநங்கல் அணையை! இது என்னவாகும் தெரியுமா?

துரதிர்ஷ்டவசமாய் சண்டை மூண்டு, ஓரிருகுண்டு விழுந்தாலே பக்ராநங்கல் அணை உடைந்து விடும்!

உடைந்துவிட்டால் அதன் பலன் என்ன தெரியுமா? அணை வெள்ளம் நேரே டில்லிக்கு வந்துநகரை 60 அடி தண்ணீரில் ஆழ்த்தி டில்லியை காணாமற் செய்துவிடும் அந்த நிலையில் டில்லி மக்கள் எல்லோரையுமே ஆலிலையில் துயின்ற கிருஷ்ண பரமாத்மாவாக ஆக்குவதற்கு இந்தத் திட்ட தயாரிப்பாளர்கள் எதுவும் திட்டம் வைத்திருக்கிறார்களோ என்னவோ! ஆனால் மிகப் பெரிய பக்ராநங்கல் அணை நமது வாழ்வின் பாதுகாப்புக்காகக் கட்டப்பட்டதாகச் சொல்லுகிறார்கள் ஆனால் எதிரியின் படை வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கிறது ஆனதால் வாழ்விக்கக்கட்டிய அணை, நமது தலைநகரையே விழுங்கும் இடத்தில் நிர்மாணமாகி இருக்கிறது. இப்படிக் கட்டியவர்களை நம்மவர்கள் என்பதற்காக, பூவிட்டுப் போற்ற முடியுமா? மக்களே சொல்லுங்கள்!

திட்டமிடுவது எவருக்கும் எளிது ஆனால் திட்டத்திற்கான தேவை—சூழ்நிலை — பொருளாதார வசதி—ஆகியவற்றை முன்னால் திட்டமிட்டுக்கொள்ளவேண்டும் எதையேனும் செய்து, அதை பெரிதாகப் பிரச்சாரம் செய்து மக்களை மயக்கி வோட்டுத் திரட்ட வேண்டுமென்பதற்காக இருப்பு தெரியாமலே திட்டமிட்டு, திட்ட நிறைவேற்றத்துக்கு கடன் வாங்கினால் கடன்தான் பெருகி நிற்கும், சரியான செயற் திட்டத்தை வகுத்துக்கொண்டு தியாக புத்தியும், திறமையும் கொண்ட நிர்வாகிகளிடம் திட்டங்கள் ஒப்புவிக்கப்பட்டால் அவர்கள் நிலையறிந்து செயல் புரிவார்கள்.

செயற் திட்டம் தயாரிப்பதற்கென்று கல்கத்தவில் ஒரு கழகத்தை சர்க்கார் நிறுவி இருக்கிறது. அது வெளியிடும் திட்டங்களெல்லாம் காலத்துக்கு ஒவ்வாதவையாகவே இருக்கும். ஆயினும் வருடத்துக்கு ஒருகோடி ரூபாய்களை அக்கழகம் தீர்க்கிறது. அந்த ஒரு கோடி ரூபாய்களுக்கான கணக்கு விவரங்களை ஆடிட்டர்கள் சோதிக்கக் கூடாதாம்-சர்க்கார் சலுகையளித்திருக்கிறது! ஒருகோடி ரூபாய் தீருகிறது-அதனால் பலனும் பூஜ்யம்-ஆனால் ஆடிட்டர்கள் கணக்குகளைக் கேட்கவும் கூடாது!

எப்படி உருப்படும் இந்தநாடு? இம்மாதிரிபுத்திபோதாதநிர்வாகத்திடமிருந்து நாட்டை மீட்டவே நான் காங்கிரசை எதிர்த்துப் போராடுகிறேன்......

(கிருபளானி பேசிய இக்கூட்டத்திற்கு, அமெரிக்காவில் இந்திய ஸ்தானிகராக இருந்த ஜி. எல். மேத்தா தலைமை வகித்தார். கிருபளானியின் குற்றச்சாட்டுகளை சரிதான் என்று தாமும் ஏற்பதாக மேத்தா தமது முடிவுரையில் கூறினர்.)

(4—ம் பக்கத் தொடர்ச்சி)

பெரி: பைத்தியக்கார மனுசன்! நான் ஏதோ என் மனசிலே பட்டதைச் சொன்னேன்; அதிலே என்ன தப்பு?

புரட்: இதோ பாருங்கள்; அரசியல், சமூகம் இவற்றைப்பற்றி என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள்; கவலை இல்லை. ஆனால் மனதிலே படுவதையெல்லாம் சொல்வதை தாங்கிக் கொள்ளக்கூடிய இடம் மொழி இல்லை.

பெரி: என்னது?

புரட்: இந்தி எதிர்ப்புப் போராட்டம் எதற்கு நடத்தினீர்கள்?

பெரி: ஏதோ நடத்தினோம். தமிழ் அழிஞ்சுப்போகுமே, வடநாட்டுக்கார பசங்க நம்ம தலைமேலே குந்திக்குவானுங்களே அப்படின்னுதான்.

புரட்: இப்போ நீங்கள் செய்வதும், பேசுவதும் மட்டும் என்ன தமிழே அழிந்துப் போகக் கூடிய வகையில் பிற மொழிக் கலப்புத் தேவைதான் என்று பேசவில்லையா? காங்கிரசை ஆதரித்துக்கொண்டே போனா வட நாட்டான் தலைமேலே உட்காராமல் தோள்மீதா உட்காருவான்? காமராசர் சிறந்த மக்கள் தொண்டராக இருக்கலாம் பாராட்டுவோம். அவருக்குப் பின்னாலே இந்த நாட்டு மக்களின் கதி என்ன? உங்களுடைய அடிப்படை இலட்சியம் என்ன? எவ்வளவுக்கெவ்வளவு இப்போது காங்கிரசின் கரங்கள் வலுப்படுத்தப் படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு எதிர்காலத்திலே தென்னாட்டின் குரல்வளை இறுக்கி நெரிக்கப்படும் என்பது உங்களுக்குத் தெரியாதா?

பெரி: என் காலத்திலே காமராசர் ஒழுங்கா நடந்து உதவிகளைச் செயராரு. அதுபோதும் எனக்கு.

புரட்: அப்போ எதிர்காலத்தைப் பற்றி உங்களுக்கு அக்கறையே இல்லையா? நம்முடைய பிள்ளை குட்டிகளும் நல்ல முறையில் வாழவேண்டாமா? நம்மை

(10ம் பக்கம் பார்க்க)

6—ம் பக்கத் தொடர்ச்சி

செய்வது, ஏகாதிபத்திய முறை! இதையே இந்தியாவைச்சுரண்டிய வெள்ளைக்காரன் செய்தான்!!

இலாபமும் பெருமையும் தனக்கே வரவேண்டும்! தன் கைப்பிடியிலிருந்து உலகம் மதிக்கும் ஒருதொழில் போய் விடக்கூடாது!- தன்னிடமே இருக்க வேண்டும்!—

என்கிற ஆதிக்க ஆசையால். டில்லி ஏகாதிபத்தியம்,

மான்யத்தை நிறுத்தி, 'ஐயோ!' என்று கன்னடம் அபயக்குரல் எழுப்ப, உன்னால்முடியாதா? என்னிடம் கொடுஎன்று தங்கத் தோலைக் கேட்டிருக்கிறது.

எதெது, வருமானத்துக்குரிய வழிகளென டில்லி கருதுகிறதோ அதையெல்லாம் அகில இந்திய மயமாக்க டில்லி ஆவல் கொண்டிருப்பதை அறிவோம்! வாணிபம்—சுங்கம்—ஆலைகள்—கசால்—வருமான வரிகள் — இவை போதாவென கோயில்களையும் தன்னுடைய டில்லிப் பொருள்களாக்கிக் கொள்ள மத்ய அரசு முயல்வதை அறிவோம்! அந்த முயற்சியின் வரிசையிலேதங்கச் சுரங்கமும் வந்து நிற்கிறது இன்று!!

டில்லியின் தாக்கீதைப்படித்து கன்னடமாநிலச்|சட்டசபையிலே, முதலமைச்சர் ஜட்டி இந்தக் கிழமை 26ந்தேதி . பேசியிருக்கிறார்.

"நஷ்டம் வருகிறதென்றால் கனிப்பொருள்களைத் தோண்டியெடுப்பதிலே இல்லேய்யா! அவைகளிலிருந்து தங்கம் கொணர்வதில் இல்லேய்யா! எதிர்பார்த்ததை விட அதிகமான தங்கம் கிடைக்கிறது. ஆனால்மார்க்கெட் விலைக்கு டில்லி வாங்கிக் கொள்ளாததால், நஷ்டம் வருகிறது நஷ்டம்!"

"இந்த நஷ்டத்தை ஈடு செய்ய இத்தனை வருடமும் இந்திய அரசுஉதவிதொகை தந்தது, இப்போது அது முடியாதென்று சொல்லி, தன்னிடம் ஒப்படைக்கும் படிக் கேட்கிறது."

"மத்ய அரசு வசம் கொடுத்துவிட மாநில அரசு விரும்பவில்லை, ஒன்று நம் வசம் இருக்கவேண்டும்; இல்லாவிடில் ஒரு கார்ப்பரேஷன் அதை நடத்த வேண்டுமே ஒழிய இந்திய அரசிடம் ஒப்படைக்கும் பிரச்னைக்கே இடமில்லை."

வீரமும் காரமும் தொனிக்க தோழர் ஜட்டி விளக்கமளித்திருக்கிறார் சட்டமன்றத்தில்! டில்லியின் தாக்கீது கண்டதும் 'தாதாஸ்து' போடாமல் இப்படிப் பதில் சொல்ல வேண்டிய நெருக்கடிக்கு கன்னடக் காங்கிரஸ்ஆட்சியைக் கொண்டுவந்தது, சட்டமன்றத்தில் எழும்பிய புயலாகும்.

"சொந்தக்காலில் நிற்கக்கூடிய தொழிலை டில்லியிடம் ஒப்படைப்பதென்றால், என்னய்யா நியாயம்? உனக்கென்ன இதில் வேலை! எங்கள் தங்கத்தை நாங்களே, வெளிமார்க்கெட்டில் விற்று, எங்கள் வழியைப் பார்த்துக் கொள்கிறோம், விட்டுப் பாரேன்! வெள்ளைக்காரக்கம்பெனியிடம் தங்க வயல்கள் இருந்தபோது அந்தக் கம்பெனி இப்படிதானே செய்தது? நீதானே அந்த முறையை மாற்றிக் கெடுத்தாய், இப்போது உதவியும் செய்யமாட்டேன்! கழுத்தையும் நெறிப்பேன்!! என்றால் கன்னட மக்கள் என்ன ஏமாந்தவர்களா? நல்லதொரு தொழிலை—உலகம் போற்றும்தொழிலைபிடுங்கிக்கொள்ள ஏனிப்படி துடிக்கிறாய்?"—என்று எதிர்க்கட்சித் தலைவர் ஜே. பி. மல்லராத்யா கேட்டிருக்கிறார் சட்டமன்றத்தில்.

"வெளிநாடுகளுக்கு சர்க்கரை ஏற்றுமதியாக வேண்டும் என்று சொல்லி சர்க்கரை ஆலைகளுக்குமான்யம் கொடுக்கிறாயல்லவா! அப்படிக் கொடுக்கும்போது தங்கத்துக்கு ஏன் துரோகம் செய்ய வேண்டும்? ஒழுங்கான ஒருதொழில் நடக்கும் போது அதைப் பிடுங்கிக் கொள்ள நினைக்கலாமா மத்தியஅரசு? ஏழெட்டு ஆண்டுகளாகக்கூட நஷ்டம் வந்தது. இபபோது இலாபம் வருமென்றதும் என்னிடம் கொடு என்று கேட்பது என்னயோக்யதை?" என்று கேட்டிருக்கிறார் எம். சி. நரசிம்மன் என்பார். இவர் ஒரு கம்யூனிஸ்டு!

"மத்ய சர்க்கார் செய்கிற தொழில்: என்று பற்பல தொழில்களை பங்களூரிலே கொண்டு வந்து இந்தியசர்க்கார் வைத்திருக்கிறார்கள். தங்கள் நிர்வாகத்தில்நடத்துகிறார்கள். அங்கே யாராவது நம்மவர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறார்களா — கொடுக்கிறார்களா என்று பார்த்தால் இல்லை! எல்லாம் அவர்களுக்கே! இந்த இலட்சணத்தில்இந்ததொழிலையும் கொடுத்தால் என்ன ஆவார்கள் நமது மக்கள்என்பதுபுரியாதாநமக்கு?"

என்று வடக்கு தெற்கு, அவர்கள் நாம் என்று பிரித்துப் பேசிமுழக்கமிட்டிருக்கிறார் முன்னாள் முதலமைச்சரும் இப்போதுகூட பெரிய காங்கிரஸ்காரர் என்று மதிக்கப்படுபவருமான அனுமந்தையா!!

தன்னாலே வரும் இந்த தனியுணர்ச்சி!—என்று நாம் குறிப்பிட்டால், "சீச்சி! இதென்ன பைத்யக்காரத்தனம்.இந்தியாஎல்லாம் ஒரே நாடன்றோ? எல்லாம் நம்முடைய பொருள்கள்தானே!!' என்று சமரசசன்மார்க்கம் பேசுவார்கள் தேசீயத்திருவாளர்கள். அவர்தம் திருப்பாவைக்கு நிலக்கரியைக் கொண்டுவர விரும்புகிறோம்.

நிலக்கரி இன்று தொழில்களுக்கு இன்றியமையாத பொருளாக விளங்குகிறது! ஆலைகள் சுழலவும் பல தொழில்கள் உருளவும் மிகமிகத் தேவையானபொருளாகும். ஆனால் இன்று நிலக்கரி தெற்கே இல்லை! நெய்வேலி தோண்டி யெடுக்கப்படுமானால், நாம் உயர் கட்டத்தில் விளங்குவோம் என்பது ஒரு புறமிருந்தாலும் இன்று நமக்கு வேண்டிய நிலக்கரி பீகாரிலிருந்தும், வங்கத்திலிருந்தும் அசாம் ராசபுதனத்திலிருந்தும், ஒரிசாவிலிருந்தும் வரவேண்டியிருக்கிறது.

நாடு பூராவுமுள்ள சகல தொழில்களும் ஒரே மாதிரி நடக்க வேண்டுமென்று கருதும் அரசானால் என்ன செய்யும்? வடக்கு தெற்கு என்று பாராது, நிலக்கரியைப் பங்கிட்டு அனுப்பவேண்டுமன்றோ! அதுநடக்காத காரணத்தால் தென்னகத்திலுள்ள பல தொழில்கள் பாதிக்கப்படுவதாக இங்குள்ளோர் புகார் எழுப்பினர், டில்லியிடம்.

"அப்படியொன்றும் பேதம் காட்டும் நினைப்பில்லை! சரிவர ரயில் வாகன வசதிகள் கிடைக்கவில்லை," என்று டில்லி பதிலளித்தது!

"ஏன் சார்! டில்லியில் தென்னாட்டரான நீங்கதானே ரயில் மந்திரியாயிருக்கீங்க? இதைக்கொஞ்சம் கவனிக்கக்கூடாதா?' என்று சென்னைக்குவந்த ரயில்வேதுணை மந்திரி எஸ். வி. ராமசாமியைப் பத்திரிகைநிருபர்கள்கேட்டதற்கு "அப்படியெல்லாமில்லையே! உடனுக்குடன் வாகின்கள் நகர்வதற்கான எல்லா ஏற்பாடுகளையும், ரயில்வே இலாகா செய்திருக்கிறது. துரிதமாகப் பட்டுவாடா செய்யவேண்டிய பொறுப்பு சுரங்க கனி இலாகாவைப் பொறுத்தது" என்று பதிலளித்திருக்கிறார்.

'நமது' என்றால் டில்லியின் கையும் மனமும் சுருங்குகிறது! நம்மவர்கள் எவ்வளவு தொல்லையும் வேதனையுமடைந்தாலும், கவலையுணர்ச்சி சீக்கிரம் வருவதில்லை!!

'தனது' என்றால் அடடா, என்னென்ன முறைகள் தந்திரங்கள் கையாளப்படுகின்றன டில்லியால்? இதுதானய்யா ஏகாதிபத்யம் என்றால் இன்னும் புரிந்து கொள்ளாதவர்கள் போல் நடிக்கின்றனரே, இலாப வேட்டைக்கார அரசியல் நரிகள்!!

—○—○—

(9—ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்த்த வேண்டாமா?

பெரி: என்ன பெரிய எதிர்காலம்—புடலங்கா! இப்போ உள்ள நிலைமைக்கு, எனக்குத் துரோகஞ் செய்த க. து. பசங்களை ஒழிக்கணும். அதுக்குக் காமராசரை ஒரு கருவியா பயன்படுத்திக்கிறேன். அவ்வளவுதான்.

புரட்: ஓகோ...! அதுதான் காங்கிரசுக்காரர்களும் அப்படிப் பேசிக்கொள்கிறார்கள் போலே இருக்கு!

பெரி: எப்படி?

புரட் 'தி. மு. க. வளர்ந்துபோகிற போக்கைப் பார்த்தால் இன்னும் பத்தாண்டுகளில் திராவிட நாடு கிடைத்தாலும் கிடைத்துவிடும். பிறகு காங்கிரசுக் கதருக்குள் ஒளிந்து கொண்டு காசைக் குவிக்கமுடியுமா? ஆகையாலே அண்ணாத்துரை செடியாக இருக்கும் போதே சீவித்தள்ளத்வேண்டும். அதற்குப் பெரியாரை கத்தியாக—கருவியாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்' என்றுதான் பேசிக்கொள்கிறார்கள்

பெரி: அப்படியா பேசிக்கிறாங்க! பொறுக்கிப் பசங்க!

புரட்: இதிலிருந்து ஒரு உண்மை பகல் ஒளி மாதிரி பளிச்செனத் தெரிகிறது.

பெரி: அது என்ன வெங்காயம்?

புரட்: பணபலம் கொண்ட நீங்களும் படை பலம் கொண்ட காமராசருமே அஞ்சக்கூடிய அளவுக்கு பொறுமையாலும் பெருந்தன்மையாலும், அறிவாலும் ஆற்றலாலும், அன்பாலும் அடக்கத்தாலும் யாரையும் அடக்கியாள வேண்டுமென்ற அதிகார மமதை இல்லாது, எவரையும் அரவணைத்துக்கொள்ளும் தாய்ப்பாசத்தாலும் அண்ணாதுரை ஒரு மாபெரும்! மலையாகவே வளர்ந்துவிட்டார்.

பெரி: (சினமுற்று காரோட்டியை நோக்கி) இது கிடக்குது வெங்காயம்; நீ விடய்யா வண்டியை!

(கார் மறைகிறது. கவிஞரின் கண்களில் இப்போது அழுகைக்குப் பதில் அனல் பறக்கிறது)

இதோ ஒரு சஞ்சீவி
கால் ஆணிக்கு
(மேல் பூச்சு மருந்து)
காலில் குழி விழுந்தும், சதை வளர்ந்து முற்றியும் நடக்க முடியாமல் வருந்துபவர்களுக்கு நிச்சயநிவாரணி
விலைதபால்செலவுடன் 4-25
வாணி புக் டிபோ,
3, மலையபெருமாள் தெரு,
சென்னை-1.

கன்னடத் தனிவடிவங்கள்

ஆ, சேரும்போது 4—எழுத்துக்களில் உயிர்க்குறி இணைவுச் சிறிது மாறுபடுகிறது.

ಣ [Ṇa] ~ ಣಾ [Ṇā] | ಱ [Ṟa] ~ ಱಾ [Ṟā]
ಞ [Ña] ~ ಞಾ [Ñā] | ೞ [Ḻa] ~ ೞಾ [Ḻā]

இ, ஈ, சேரும்போது இவற்றுள் முதல் இரண்டு எழுத்துக்களில் வடிவம் வருமாறு.

ಣ [Ṇa] ~ ಣಿ [Ṇi] : ಞ [Ña] ~ ಞಿ [Ñi].

எ, சேரும்போது 4 எழுத்துக்களில் உயிர்க்குறி தனி வடிவம் பெறுகிறது. ஏ, ஐ, ஒ, ஓ சேரும் வடிவங்களிலும் இது தொடர்வதுடன் ஔ சேரும் வடிவத்தையும் மாற்றுகிறது.

ಣ [Ṇa] ~ ಣೆ [Ṇe] : ಣೇ [Ṇê] ~ ಣೈ [Ṇai]
ಣೊ [Ṇo] ~ ಣೋ [Ṇô] ~ ಣೌ [Ṇau].
ಞ [Ña] ~ ಞೆ [Ñe] : ಞೇ [Ñê] ಞೈ [Ñai].
ಞೊ [Ño] ~ ಞೋ [Ñô] ~ ಞೌ [Ñau].
ಱ [Ṟa] ~ ಱೆ [Ṟe] : ಱೇ [Ṟê] ಱೈ [Ṟai].
ಱೊ [Ṟo] ~ ಱೋ [Ṟô] ~ ಱೌ [Ṟau].
ೞ [Ḻa] ~ ೞೆ [Ḻa] ~ : ೞೇ [Ḻê] ~ ೞೈ [Ḻai]
ೞೊ [Ḻo] - ೞೋ [Ḻô] - ೞೌ [Ḻau]

—தொடரும்

(8—ம் பக்கத் தொடர்ச்சி)

'சம்மதிச்சுட்டுதா?'

'ஓ, எஸ்! இன்னைக்கே போய் பாருங்கப்பானு சொன்னப்புறம்தானே இங்கே ஓடியாந்தேன்! மறந்துடாதீங்க மாலை புரோகிராமை! நான் வர்றேன்!'

அவர் போய்விட்டார். நான் மாடிக்கு ஓடினேன். மூடிய சன்னல் கதவுகள்தான் என்னை வரவேற்றன!

'ஏ, பாரிஜாதம்! ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாளுன்னு உலகம் சொல்வதை 'காதல் கால் வருஷ'முன்னு நீ மாத்திட்டியே! உன் நினைப்பால் நான் எத்தனை பசங்க படிப்பிலே மண்ணைப் போட்டேன்தெரியுமா? பொருளாதார வகுப்பிலே ஷெல்லியின் கவிதைகளைத் தவறிச் சொல்லி முட்டாள் பட்டம் வாங்கிக் கட்டிக்கிட்டது தெரியுமா? நீயே இப்போது என்னை முட்டாளாக்கிவிட்டு, காதல் கொலைகாரியா ஆயிட்டுயே; இது நீதியா? இந்தப் பாவமெல்லாம் உன்னைச் சும்மா விட்டுடுமா? இந்த வருஷம் நீ பரீட்சையிலே கோட் அடிப்பாயாக! அந்த ஐ. ஏ. எஸ். மாப்பிள்ளை உன்னை விரட்டுவானாக!'—என்று சபித்துவிட்டுச் சோர்ந்து விழுந்தேன் படுக்கையில்!

* * *

மாலையில் பாலு முதலியார் வந்தார்.

நான் சுாதலிக்கு மாப்பிள்ளை பேச அவருடன் புறப்பட்டேன். குறிப்பிட்ட முகவரியை தேடிப் பிடித்து வீட்டை அடைந்தோம். உள்ளே நுழைந்தோம்.

ஒரு வாலிபன் எங்களை வரவேற்றான். அவனது 'டோனி' கிராப்பும், பூப்போட்ட கைலியும், வாயில் புகைந்து கொண்டிருந்த சிகரெட்டும் அவன்தான் 'ஐ. ஏ. எஸ்.' என்று பறைசாற்றின.

"மூர்த்தி ஐ. ஏ.எஸ்..." என்று இழுத்தார் பாலு முதலியார்.

"நா தான்!...சிட்டவுன்!"—என்று சொன்னான் மூர்த்தி. பாலு பேச ஆரம்பித்தார்..

"நீங்கள் பாஸ் செய்துவிட்டீர்கள், கன் கிராஜுலேஷன்ஸ்!... நான் உங்கள் தகப்பனாரைப் பார்க்க வந்தேன்"

"பார்க்கவா, பேசவா?"

"பேசத்தான்!"

"ஐ எம் சாரி, என் அப்பா ஊமைங்கிறது தெரியாதா உங்களுக்கு?"

"அடடே...அது எனக்கு தெரியாதே!"

"ஒரு குடும்பத்தைபத்தி நல்லா தெரிச்சுக்காமே இப்படியெல்லாம் நுழையறது ரொம்ப தப்பு!"

திடுக்கிட்டார் பாலு முதலியார் ...இருந்தாலும் அசட்டுப் புன்னகையுடன், "அதெல்லாம் ரொம்ப சரி; நீங்க ரொம்ப கருர் பேர்வழி போலருக்கு! அப்படிதான் இருக்கணும்... அப்ப 'டாப்பிக்கை' உங்ககிட்டேயே ஆரம்பிக்கலாமா? உங்களைப் பற்றிய விஷயம்தானே!"

"என்னைபத்தீன்னா எனக்கிட்டதான் பேசித் தீரணும்!"

"நான் ஒரு தகப்பன். என் மகள் பி. ஏ. படிக்கிரு...அவளுக்கு உங்களை மாப்பிள்ளையாக்க நான் விரும்பறேன்..."

"ஓ எஸ்! ஆனால் என்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்தால்—கேட்கிற சீதனம் கொடுத்தால் நான் ரெடி!"

"அப்படியா? சொல்லுங்கள்... சீக்கிரம் சொல்லுங்கள்!" என்றார் பாலு முதலியார்.

"சாந்தோம் ஹைரோடு பீச் ஓரமா செட்டியார் ஒருத்தர் பங்களா விற்கிறாராம், ஒரு லட்சம் சொல்றார். எண்பதாயிரமுன்னு முடியுங்களாம், அதை என் பேருக்கு வாங்கிதரவேண்டும்!"

பாலுமுதலியார் முகம் விகாரமாக மாறியது.

"அப்புறம் ... லேட்டஸ்ட் செவர்லே; நடிகர் தங்கவேலு வாங்கியிருக்காரே, அதைப்போல ஒன்றுபெண்ணுக்கு வைரத்தோடு கல்யாணச்செலவுக்குஒருஇருபத்தையாயிரம்! எம். எஸ். சுப்புலட்சுமி, காருக்குறிச்சி அருணசலம் கச்சேரிகள்! வைஜயந்தி நடனம்! என் அந்தரங்கச் செலவுகளுக்கு ஒரு ஐயாயிரம்!..."

பாலு முதலியார் மூர்ச்சித்து விழப்போனர். நான் பிடித்துக்கொண்டேன்.

"அது மட்டுமல்ல; என் தங்கை ஒருத்தி இருக்கா; அவள் பி. ஏ. படிக்கிரு; அவளுக்கு என்னைப் போல ஒரு ஐ. ஏ. எஸ். மாப்பிள்ளைபார்த்து கல்யாணச்செலவுகளையும் ஏற்க வேண்டும்!... கோமதி! கோமதி!" என்று அழைத்தான் அவன்.

உள்ளேயிருந்து ஒரு பெண்ஓடி வந்து நின்றாள்.

"இவள்தான் என் தங்கை கோமதி!" என்று அறிமுகப்படுத்தினன்.

பாலுமுதலியார் பேசவில்லை.

"நான் இதெல்லாம் ஏன்சொல்றேன்னு கல்யாணங்கிறது ஒரு பிசினஸ், நான் படிக்கிறதுக்கு இருபதாயிரம் ரூபாய் செலவு பண்ணினேன்; அதை இரண்டு லட்சமா திரும்பப்பெற இது தானேசந்தர்ப்பம்உங்கபெண்ணை நான் நேரிலே பார்க்கணுமின்னு அவசியமில்லே! 'டேரக்டா' மணமேடைக்கே கொண்டு வந்துடுங்க!"

கோமதிகொண்டுவந்துவைத்த காபியைத் திரும்பிகூடப் பார்க்காமல் பாலுமுதலியார் வெளியில் புறப்பட்டார். வழிநெடுகப் பேசாமல் வந்த அவர் வீட்டிற்குள் நுழையும்போது சொன்னவார்த்தைகள் இவைதான்:

"என்மகளை ஒருகுட்டிச் சுவருக்காவது கட்டி வைப்பேனே தவிர, இந்த ஐ. ஏ. எஸ். பசங்களின் காலில் விழமாட்டேன்!"

* * *

குறுகிய காலத்திலேயே அந்தக் 'குட்டிசுவர்' நானுகி விட்டேன் என்பதைச் சொல்லி இந்து கதையை முடிப்பதற்கு முன் சில வார்த்தைகள்...

* * *

திருமண நாள்...

இரண்டு லட்சத்தில் அல்ல இரண்டாயிரத்தில் முடிக்கிறது திருமணம்!

மணமேடையில் பாரிஜாதத்திற்கு அருகே ஒரு பெண்...ஐ.ஏ. எஸ். மூர்த்தியின் தங்கை கோமதி நிற்பதைக் கண்டேன்

"இவள் ஏன் இங்கே வந்தாள்? விரட்டு வெளியே!" என்றேன் என் மனைவியிடம் காதோடு காதாக!

"நல்ல கதை போங்கள்! நான் அவள் காலில்விழ—இவள் தன் கண்ணன் காலில்விழ அந்தஅண்ணன் என் அப்பாவின் காலை வாறி விடாவிட்டால் ஏது இந்த திருமணம்? இதுகூடப் புரியவில்லையா நத்தைமூக்கா?"

பாரிஜாதம் நடத்திய நாடகத்தால்தான் என் இதயங்கவர்ந்தவளை மூர்த்தி கவர்ந்து செல்லவில்லை—என்ற உண்மையை உணர்ந்த நான், "பக்கத்துவீட்டு பாரிஜாதமே..." என்று அவள் காதில் விழும்படியாக மெதுவாக முணு முணுத்தேன்!

—0—

கேள்வி பதில்

கே: நடைபெற்ற மேயர் தேர்தலில், சில காங்கிரசார் மட்டும் மனச்சாட்சிக்கு விரோதம் செய்யாமல் தி. மு கழகத்திற்கு ஒட்டுப்போட பலர் தங்கள் வாக்கு 'தோற்றவரை' ஆதரித்து வீணக்கி விட்டது ஏன்?

பி கருணகரன்
சென்னை-10

ப: வண்டுகள் எல்லாமே ஓரினம் தான், இதில் சில மட்டும் தேனைச் சேகரிக்கின்றன! சில 'மல'த்தை உருட்டிக்கொண்டு செல்வதில்லையா?

* * *

கே: மேயர் தேர்தலில் சம்பத் கட்சியினர் ஒட்டுப்போட்டிருந்தால் தி. மு. கழகம் தோற்றுத் தானே போயிருக்கும்?

கே. பி. முஸ்தபா,
கோமனீஸ்வரன்பேட்டை

ப: தி. மு. கழகத்தைத் தோற்கடிப்பதுதான் தான்குறிக்கோள் என்று குட்டிக் காங்கிரசின் தலைவர்சம்பத்டெல்லியிலிருந்து பறந்து வந்திருப்பாரேயானுல், அதைத்தான் செய்திருப்பார். டெல்லியிலே சந்தித்து உரையாடிய 'தமிழகத் தேர்தல் சிங்கம்' காமராசர் அதைத்தானே போதித்திருப்பார்? 'கழகத்தை ஒழிப்பதுதான் என்முதல் வேலை' என்று நுங்கம்பாக்கம் திடலில் இருந்த பலத்தையெல்லாம் ஒன்ருகத் திரட்டி, அடித்தொண்டையால் ஆர்ப்பரித்த தோழர் சம்பத் தன்னுடைய நகரமன்ற உறுப்பினர்களை அனுப்பி குசேலருக்குக் குழி பறித்துவிட்டுவாருங்கள் என்று ஏன் சொல்லவில்லை? இதை யோசித்தால் நமக்கு மறைந்திருக்கும் உண்மை நன்ருகப்புலப்படும்.

புதுக்கட்சி உதயமானதற்குப் பிறகு நடைபெறும் தேர்தல் இதுதான், ஆரம்பித்ததிலிருந்து அங்கிருந்த சிலர் ஒவ்வொருவராகத் திருப்பி வந்தார்கள்.

11, பத்தாகி—10 ஒன்பதாகி இறுதியில் மிஞ்சியது ஏழுஎன்று இறுமாந்து கிடந்தார்கள். அந்த ஏழில் இரண்டு இந்தத் தேர்தலில் நீதியின் பக்கம் சேர்ந்து விட்டதும் மிஞ்சியது பஞ்ச பாண்டவர்களைப் போல் ஐந்து! அவர்களையும்ஒட்டளிக்க அனுப்பினுல் என்ன ஆகும்? தனியறையில் நின்று கொண்டு கையில் ஒட்டுத்தாளுடன் கண நேரம் சிந்தித்தால் போதுமே; தானுக கை குசேலருக்கு வாக்களித்துவிடுமே!

எத்தனை காலம் துரோகத்திற்குத் துணைபோகும், வஞ்சிக்கப்பட்ட நெஞ்சங்கள்? தான் பிறந்து, வளர்ந்து வாழ்ந்த இடத்தை எத்தனை காலம்தான் மனச்சாட்சிக்கு விரோதமாக வசைபாடிக் கொண்டிருக்கும்? தனி மனிதனின் விருப்புவெறுப்புக்கு நாமும் ஆட்பட்டு ஒரு ஆலமரத்தையே குண்டுசி அழிக்கப் பார்த்தோமே, என்று எண்ணி விருக்கக்கூடிய இருதயங்கள்தானே அவை?

தலைவரே பயந்து விட்டார் தன்னுடன் இருப்பவர்களை ஒட்டளிக்க அனுப்ப! இதுஎந்தமுடிவின் ஆரம்பம் என்று நினைக்கிறீர் நண்பரே! அடுத்த நகரசனத் தேர்தலுக்குள் அவர் தனி மரமாக—அதுவும் இலை, கிளையற்ற மொட்டையாக நிற்பார் என்பதுதான் அந்த முடிவு!

* * *

கே: சென்னை நகரசபை மேயர் தேர்தலில் இத்தமுறை காங்கிரஸ் ஏன் போட்டியிடவில்லை?

பி. குருமூர்த்தி
திருவான்மியூர்,

ப: சேரியிலே வெள்ளித் தம்ளரைப் பார்த்தேன்—என்று பச்சையாகப் புளுகுகிருரே; அந்த கக்கனைப்போய் கேளுங்கள். பதில் சொல்வார். இந்த முறை முறை தேர்தலுக்கு தாழ்த்தப்பட்ட வகுப்பு உறுப்பினரே போட்டியிட வேண்டும்என்பது நியதி. அதனுல்தான் அந்த முயற்சியில் ஈடுபடவில்லை, தாழ்த்தப்பட்ட மக்கள்நலனில் அக்கறை கொள்ள அந்தக் கட்கிக்கு நேரம் ஏது? அவசியம் தான் என்ன? கோவை மில்அதிபர்கள் எங்கே; இந்த குப்பத்து பரட்டைத்தலைகள் எங்கே? பஸ் ஓட்டும் பண முதலைகள் எங்கே; இந்தபட்டினிப் பட்டாளாம் எங்கே? அந்த அசுத்தப் பிறவிகளை—அவமானச்சின்னங்களைக் கட்டிக் காப்பதால் கண்டபுனிதமான காங்கிரசுக்கு இழுக்கு வந்துவிடாதா?

கழகம்தான் ஆதித்திராவிடர்களின் நலனிலே பெரும் அக்கறை கொண்டிருக்கிறது என்பதற்கு இன்னெரு உதாரணம் நண்பரே; மாநகராட்சியில் கழகத்தின் சார்பில் 7 உறுப்பினர் இருக்கிருர்கள்; காங்கிரசின் சார்பில் 'ஒன்னே ஒன்னு; கண்ணே கண்ணு' அதன் வாயிலும் இப்போது மண்ணு!

* * *

கே: அண்ணுதுரை நிச்சயம் தோற்றே விடுவார்—என்று சொன்ன அமைச்சர்கள் காஞ்சிபுரத்திலே முகாம் போட்டிருப்பானேன்?

இரா. சீனுவாசன்,
ஹட்சன்பேட்டை

ப: அவரவர்கள் சொந்தத் தொகுதிக்குப்போனுல் விரட்டியடிச்சிருக்கார் என்று வதந்தி!

* * *

கே: அன்பு. பாசம், நேசம் இவைகளை எளிதில் உதறித் தள்ளி மறந்திடும் நெஞ்சை எதனேடு ஒப்பிடுவது?

எம். கே. திராவிடன்
மணியட்டி
நீலகிரி

ப: குட்டிச்சுவருக்கு!

கலையகம்

கப்பலோட்டிய தமிழன்

தனிப்பட்டவர்களின் வரலாறுகளைத் திரைப்படமாக்கும் திறனும் ஆர்வமும் மேனுட்டினருக்கு மட்டுமே உண்டு என்ற நிலையை மாற்றி நம்மாலும் முடியும் எனறு நிரூபித்திருக்கிற பி. ஆர். பந்துலு அவர்களின் முயற்சியை எவரும் பாராட்டுவர். காங்கிரஸ் இயக்கத்துக்காகப் பாடுபட்ட பெரியார் வ. உ. சிதம்பரனர்! படத்தைப் பார்க்கும்பொழுது ஒரு நாட்டின் விடுதலைக்காக நாமும் எவ்வளவு தியாகங்களை செய்யவேண்டும் என்கிற உணர்ச்சியை உருவாக்குகிறது. கடைசிக் கட்டத்தில் சிவாஜி கணேசன் தென்படவே இல்லை; படம் முடிந்து வரும்போது சிதம்பரனுரே தெரிகிருர்! சுவைபடத் திரைக்கதையை 'சித்ரா' கிருஷ்ணசாமி அமைத்திருக்கிருர். எஸ், டி. சுந்தரம் உணர்ந்து வசனம் எழுதியிருக்கிருர். எஸ். வி. சுப்பையாவின் 'பாரதியார்' எல்லோரது கவனத்திலுமிருப்பார். சிதம்பரனுர் கண்களை முடிக்கொண்டு இறந்ததோடு படம் முடிந்திருக்கலாம். ரங்காராவ், பாலாஜி, ருக்மணி, துரைராஜ், அசோகன், சந்தானம், கருணநிதி, முதலியோர் நன்கு நடித்துள்ளனர். ஜெமினி சாவித்திரி ஜோடியின் காதலில் புதுச்சுவையும் பூரிப்பும் கிடைக்கிறது. சுதந்திரத்துக்காகப் பாடுபட்ட ஒருவரின் வீரவரலாற்றைத் தயாரித்தவர்களுக்கு அரசு பல சலுகைகளை வழங்கலாம்! தியாகிகளையே மறந்துவிட்ட காங்கிரஸ் அரசு தியாகி ஒருவரின் வரலாற்றை எடுக்க முனைந்தவர்களுக்கா சலுகைகளைத் தரும்?

தாய்சொல்லைத் தட்டாதே

இரண்டுமாத காலத்தில் முடிந்த படமாகத் தெரியவே இல்லை- ஆரூர் தாசின் கதைக்கோவையும் கட்டுக்கோப்பான வசனமும் பெருமகிழ்ச்சியை யூட்டுகிறது. எம். ஜி. ஆர் சமூகக் கதைகளில் தனக்கென இருந்த ஒரு நல்லபாத்திரத்தை இப்படத்தில் ஏற்றுவெற்றி கண்டிருக்கிருர்! சரோஜா தேவியின் பூரிப்பும் இளமையும் படம் முழுவதும் கவர்கிறது நெஞ்சத்தை. இந்தப் படத்தின் வெற்றிக்கு மூலகாரணம் ஒளியமைப்பும்—காட்சிகளை எடுத்திருக்கும் முறையுமாகும்! டைரக்டர் திருமுகமும் காமிரா இயக்குணரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். கதை—வேடம்—எடுக்கும் விதம் இப்படி ஏதாவது ஒன்றில் ஒரு புதுமையிருந்தாலும் பார்ப்பவர்களைக் கவரும் என்பதற்கு இப்படம் ஒரு சான்று. அசோகன் நடிப்பு குறிப்பிடத் தக்கது.

பணம் பந்தியிலே

கதைகளில் புதுமையாயிருந்தால் போதும்!--என்பதற்கு இப்படம் ஒரு சான்று. அப்பப்பா! என்னபோடு போடுகிருர் எம்.ஆர். இராதா, எஸ். எஸ். ஆர். விஜயகுமாரி ஜோடியினர் சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்திக் கொண்டிருக்கிருர்கள் புதுமுகம் புஷ்பலதாவுககு நல்ல ஆரம்பம்! கதையை எழுதியவர் நமது தோழர் இரா. செழியன் எம். ஏ. அவர்களாகும். சிறந்த கல்விமானுன அவர் தீட்டிய இக்கதையைப் பிறமொழிகளில் எடுக்கத் தயாரிப்பாளர்களுக்கிடையே ஏற்பட்டிருக்கும் போட்டியே அவருடைய திறமையான கதையமைப்புக்கு ஓர் சான்ருகும்.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 12- 3. வது குறுக்குத்தெரு ,டிரஸ்ட்புரம்,சென்னை 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி முல்லை அச்சகம் 3-40 மவுண்ட்ரோடு சென்னை-6

நான் கண்ட அண்ணா

அரங்கண்ணல்

ஆபிரகாம் லிங்கன், மாபெரும் விடுதலை வீரனாக உருப்பெற்றான் என்றால், அதற்குள்ள பல காரணங்களில்ஒன்று, அவன், இரக்கமிக்கவனாயிருந்ததுதான்! உலகமே போற்றும் ஒப்பற்ற தலைவராகக் காந்தியடிகள் ஆனதற்குக் காரணம், அவரிடமிருந்த ஈரமுள்ள நெஞ்சந்தான்!! சமூகத்தில், ஒருவன் பிறப்பு, நிறம் காரணமாக இழிந்தவனாகக் கருதப்படும் கொடுமையை எதிர்த்தார்கள், இந்தப் பெரியார்கள். தனிப்பட்ட முறையில், இயலாதவனாய் ஒருவன் இருப்பானேயானால் அவனுக்கு உடனடியாக 'டிஸ்மிஸ், ஆர்டர்' கொடுத்து அனுப்புவது முதலாளித்துவ முறை! இயலாதவனுக்கும் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்பதுதான், "சக்திக்கேற்ற உழைப்பு; தேவைக்கேற்றவசதி," என்கிற சம தர்ம முறை!! உழைக்கக் கூடியவனாயிருக்கின்ற வரையில் அவனை நன்றாகப் பயன் படுத்திக் கொண்டு, அதற்குப் பிறகு உப்பில்லாத சக்கையைப் போல் கருதுவது, மனிதத் தன்மையிலேயே மிக மிக மட்டரகமானதாகும். இன்றைய செய்தித்தாளைப் பிரித்தேன்! பண்டிதநேரு அவர்களின் மெய்க்காப்பாளராக விளங்கிய அரி என்பார் இறந்து விட்டார் என்று போட்டிருந்தார்கள். நேரு சிறுபிள்ளையாயிருந்த காலத்தில், பந்து எடுத்துப் போடுவதற்காக, மோதிலால் நேருவின் பங்களாவில் வேலைக்கமர்ந்தவர், அரி. அன்றுதொட்டு இன்றுவரையில், நேரு அவர்களின் விசுவாசமுள்ள ஊழியராகயிருந்திருக்கிறார். உலகமெல்லாம் பண்டித நேரு அவர்கள் மீது பாசத்தை வைத்திருந்தாலும், அரி வைத்திருந்தது பக்தியைவிட மேலானதென்று சொல்லவேண்டும். நேருவுக்கு வேண்டிய உணவுகளைச் சமைக்கச் சொல்வது— அவருக்குப் பிடித்தமான ஆடைகள் தயாரா என்று பார்ப்பது-ரோஜாமலரைக் கிள்ளிவந்து தயாராக வைப்பது-இத்தனை மணிவரையில் இரவு கண்விழித்திருந்தாரே, காலையில் நல்ல சத்துள்ள ஆகாரங்களைத் தயார் செய் என்று தாயைப் போல் பராமரிப்பது—இத்தனை வேலைகளையும் கவனித்துக் கொண்டிருந்திருக்கிறார், அரி. அவர் ஒரு ஆதித்திராவிடர்! அரசியல் துறையில், பண்டிதநேரு அவர்களின் மீது நமக்குக் குற்றங் குறைகளிருந்தாலும், அவருடைய பண்பட்ட உள்ளத்தையும், நன்றிமறக்காத தன்மையையும் நாம் பாராட்டாமலிருக்க முடியாது. அவர் நினைத்தால், அமெரிக்காவிலிருந்து ஒருத்தரையும் ரஷ்யாவிலிருந்து இன்னொருவரையும் எடுபிடிவேலைச்கு வைத்துக் கொள்ளவா முடியாது? காசை வீசியெறிந்தால் நான் நீ-என்று 'ஆட்கள்' வரமுடியும்! ஆனால், 'அன்புள்ளவர்'கள் கிடைக்கமாட்டார்சள்!! "அரியில்லாவிடில் தனக்கு ஒரு கை ஒடிந்தது போலிருக்கும்" என்று அடிக்கடி நேரு அவர்கள் சொல்வாராம். அவர் வெளி நாடுகளுக்குப்போகும் போது, பலதடவைகளில் அரியை அழைத்துப் போயிருக்கிறார்! அதுமட்டுமல்ல சுதந்திரப் போராட்டக்காலத்தில், கூண்டோடு நேருவின் குடும்பம் சிறைபட்டபோதும், அரியையும் வெள்ளையர்கள் விடவில்லை. அரி, படித்தது கொஞ்சமானாலும், சேர்ந்த இடத்தில் கற்ற அனுபவக் கல்வி அதிகம். அதனால் ஒரு தடவை ஐக்கியமாகாணச் சட்டசபையில் நேருவின் சிபார்சால் எம். எல். ஏ. வாகக் கூட ஆனார், அரி! அப்பேற்பட்ட அரிக்கு வயோதிகம் வந்தும், நேரு அவர்கள் விடவில்லை. தன்னுடைய பங்களாவின் அருகிலுள்ள தோட்டத்து வீடொன்றில் குடும்பத்தோடு குடியிருக்க வைத்து, பராமரித்து வந்தார். அதே இடத்தில் தான், அருகில் நேரு இருக்க, அந்த அரியின் உயிரும் போயிற்று!! இப்படிப்பட்ட குணம், அரசியலில் தலைவர்களாயுள்ள, எல்லோருக்கும் வராது. நிச்சயமாக 'பொதுவாழ்வைச் சுயநலத்துக்காகப் பயன்படுத்தும் யாருக்கும் வராது. ஈரமுள்ள நெஞ்சம் உள்ளவன் தான், பிறருடைய கஷ்டங்களை உணர முடியும்! அப்படி உணர முடியாத போது! அவன், ஆதிக்கக்காரனாகிறான்!, "நம்மிடம் இருப்பவன் தான். நம்மிடமிருப்பதாலேயே, அவனை மனிதன் என்று மதிக்காமலிருக்கக் கூடாது. சராசரி மனிதனுக்கு வரக்கூடிய சோர்வுகளும்; அவனுக்கும் வரக்கூடும். அதனால் அவன் உற்சாகமிழக்கவும் கூடும் அதை நிறைவு செய்து கொடுத்து, அவன் உற்சாகம் பெறுவதற்குள்ள வழிவகைகளை அளிக்க வேண்டும். அவனுடைய இடத்தில் நாமிருந்தால், அப்படித்தானே செய்கிறோம்" என்று எண்ணுவோரே, இதயம் என்பதன் பொருளையுணர்ந்தோராகும். இளைத்தும் களைத்தும் வருகின்ற என்னைக் கண்ட அண்ணாவிடம், இந்த ஒப்பற்ற பெருந்தன்மையிருந்த காரணத்தாலேயே; ஏன்; அரங்கண்ணல் யாரையாவது துணைக்கு வைத்துக் கொள்ளேன்..." என்றார். அதிலும் கூட; பெருந்தன்மை! என்னுடைய விருப்பத்துக்கே-விட்டார்!! இப்படி மற்றவர்களுடைய விருப்பத்தை அனுசரித்துப் போவதென்பது அண்ணாவிடமுள்ள ஒரு உயரிய குணமாகும். எங்காவது காரில் வெளியூருக்குப்போகும் போது; தனக்காக; ஒரு இடத்திலும் நிறுத்தச்சொல்லமாட்டார்! தான் ஒருவன்-மற்றவர்களுக்கு எப்படியிருக்குமோ? என்றே பேசாமலிருந்து விடுவார் அவர் சொன்னால் 'சரி' என்று எண்ணாதவர்களா; கூடச்செல்லும்; நாங்கள்! இருந்தாலும் "தன்னுடையவசதிகளை மற்றவர்களுக்காக விட்டு கொடுக்கலாம். மற்றவர்களுக்கு நம்மால் அசௌகரியம் ஏற்படக் கூடாது" என்று எண்ணுகிறவர் அண்ணா! எப்போதும் அண்ணாவுடன் செல்லும் நண்பர் கவுன்சிலர் ராசகோபால் திடீர் திடீரென்று காரை நிறுத்தச் செய்வார். வேறு யாராயிருந்தாலும் கோபம் வரும்! அண்ணா பேசாமலேயிருப்பார். ஒருதடவை, அண்ணாவுடன் நான் மைசூருக்குப் போனேன். தோழர் சம்பத்துடைய இளவல் ஈ. வெ. கி. செல்வம், காஞ்சி புட்டாசாமி, ஆகியோரும் வந்தார்கள். மைசூரிலிருந்து பெங்களூர் வரும் வழியிலுள்ள சீரங்கப்பட்டணத்தைப் பார்க்க வேண்டுமென்று எனக்கு ஆசை! அண்ணா, பலதடவைகள், சரித்திரப் பிரசித்தி வாய்ந்த அந்த ஊரைப் பார்த்திருக்கிறார். இருந்தும், நான் கேட்டதால், அங்கு போனோம்!! அண்ணா காரிலேயே உட்கார்ந்து கொண்டார், டிரைவர் சுந்தாவுடன். நாங்கள் போய்ப் பார்க்க வேண்டிய இடங்களையெல்லாம் சுமார் இரண்டு மணி நேரம் சுற்றிப் பார்த்து விட்டு வந்தோம். வந்து பார்த்தால், அண்ணா, கார் டயருக்குக் காற்று அடித்துக் கொண்டிருக்கிறார்! மேல் மூச்சு, கீழ்மூச்சு வாங்க, வேட்டியை வரிந்து கட்டிக் கொண்டு, காற்றடித்துக் கொண்டிருக்கிறார், நம் காவலர் கோ!!



(வளரும்)

வாணி தமிழ்-இங்கிலீஷ் போதினி



தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல் இங்கிலீஷ்படிக்கவும் பேசவும் கடிதங்கள்எழுதவும்கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரியபைண்டு புத்தகம் விலை ரூ. 5வி.பி.பி.செலவுரூ.1-25

வாணி தமிழ், இந்தி சுபோதினி

தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றி சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக்கொள்ளலாம். விலை ரூ, 2-25 வி.பி.பி.செலவு 85 ந.பை.

ஐசுவரியம் (குடிசைக் கைத்தொழில்)

சோப், இங்கி, ஊதுபத்தி, வாசனைத்தைலம், ஸ்னோ. பேஸ் பவுடர், சாம்பிராணி போன்ற 200 கைத்தொழில்கள் கொண்டது. விலை ரூ, 4. வி. பி. பி. செலவு 85. ந. பை

குடும்ப இலகு வைத்தியம்

வீட்டு சரக்குகளைக் கொண்டு நோய்களைப் போக்கி, ஆரோக்கியம், பலம், ஆண்மை பெறுவது போன்ற அநேக வைத்திய ரகசியங்களடங்கியது. தபால் செலவோடு ரூ. 3-50

வாணி புக் டிபோ, 3, மலைய பெருமாள்தெரு

(தபால் பெட்டி எண்: 239) சென்னை-1

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி - 1 வெள்ளி 8-12-61 கதிர் - 41

கோவை அழைக்கிறது

காந்தியார் வளர்த்த காங்கிரஸ் கட்சிக்கு—இந்த நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்ட ஓர் இயக்கத்துக்கு—அகில உலகத்திலும் பேரும் புகழும் சீரும் சிறப்பும் பெற்றுவிட்ட நிகரில்லா அமைப்புக்கு—தமிழகத்தைப் பொறுத்தவரையில் இன்று கிடைத்திருக்கிற வேலை திராவிட முன்னேற்றக் கழகத்தை எப்படி அடக்குவது என்பதுதான். 1885-ம் ஆண்டில் அந்த இயக்கம் துவக்கப்பட்ட நேரத்தில், இப்படியொரு ஆபத்தான திருப்பணியை ஏற்கவேண்டுமென்று தெரிந்திருந்தால், காமராசரும், சுப்பிரமணியமும் கண்டிப்பாக அதில் அங்கம் வகித்திருக்கமாட்டார்கள்!

வருகின்ற தேர்தலில் கழகத்தை முறியடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் காங்கிரஸ் தொண்டர்கள் என்ன; தலைவர்கள் என்ன மந்திரிகள் என்ன; எல்லாருமே முழுமூச்சாக பிரசாரத்தில் இறங்கி விட்டாாகள், நாட்டை வலம் வந்துகொண்டிருக்கிறார்கள்.

"அண்ணாதுரை அமெரிக்காவிற்குச் சென்று திரும்பினால் நல்லது! நானே இலவசமாக டிக்கட் வாங்கிக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்!" என்று கனம் சுப்பிரமணியனாரும், "வயதான காரணத்தால் ஆச்சாரியாருக்கு அறிவு மழுங்கிவிட்டது; அதனால் தான் தி. மு. கழகத்துடன் ஒட்டுகிறார்" என்று பக்தவத்சலனாரும் நாவடக்கமின்றி கருத்துச் செறிவின்றி—வாயில் வந்ததை உளறிக் கொட்டிக்கொண்டு வருவதையும் நாம் கேட்டுச் சிரிக்கிறோம்.

வடக்கேயிருந்து அப்போதைக்கப்போது தலைகாட்டும் திமிரெடுத்த ஏகாதிபத்திய மூலவர்களும், அவர்களுக்கு முதுகு காட்டும் இங்குள்ள பச்சை கங்காணிகளும்—நமது பிரிவினை முழக்கத்தை—விடுதலை கீதத்தை—அலட்சியப்படுத்தும் அகம்பாவ நிலையிலிருந்து மாறி—இப்போது அழித்தே விடுவது என்ற ஆபத்தான க்கட்டத்திற்குச் சென்றிருக்கிறார்கள்.

அதைச் செய்கிறோம்; இதைச் செயகிறோம்—என்று வாய் ஜாலம் செய்கிறார்கள். அந்தத் திட்டம் இப்போது அமுலாகும்; இந்த அணைக்கட்டுககு இத்தனை கோடி கிடைக்கப்போகிறது—என்றெல்லாம் தேன் ஒழுகப் பேசுகிறார்கள். வீட்டுக்குவீடு செல்கிறார்கள்; கையெடுத்துக் கும்பிடுகிறார்கள்; காரில் சென்ற பாதங்கள் கல்லிலும் முள்ளிலும் 'நடந்து தொலைக்க வேண்டுமே' எல்பதற்காக அடியெடுத்து வைக்கின்றன!

மாதம் ரூ 1500 சம்பளம் வாங்கும் அமைச்சர்களுக்கு எங்கேயிருந்து வந்தது இந்த எளிமை? இத்தனை நாளும் எங்கே ஒளிந்திருந்தது இந்த கருணை? இவை அத்தனையும் 'வாக்குப் பிச்சை' எடுக்க தேர்தல் தந்திரம் என்பதை நாட்டு மக்கள் மிக நன்றாக உணர்ந்திருக்கிறார்கள்.

பல்லாண்டு காலமாக புறக்கணிக்கப்பட்டிருந்த சேது சமுத்திரத் திட்டம் 'இதோ அதோ' என்று இப்போது துடிக்கிறார்கள்; நிச்சயம் இந்தத் திட்டத்தில் இடம் உண்டு என்று வாக்குறுதி அளிக்கிறார்கள்

மின்சார ரயில் அதிகரிப்பா? ஆரம்பித்துவிட்டோம் வேலையை—என்கிறார்கள் 'அந்த திட்டத்திற்கு டெல்லி அனுமதி தராவிட்டால் நான் மந்திரிப் பதவியை ராஜினாமா செய்துவிடுவேன்' என்று கூட ஒரு தமிழக அமைச்சர் வீராப்பு கூறியதாக வதந்திகள் உலவுகின்றன.

தென்னகத்திற்கு ஓரவஞ்சனை செய்யப்பட்டிருக்கிறது என்பதை தெளிவாக எடுத்துக் காட்டும் ஐந்தாண்டுத் திட்டம்—அந்த சோனிக் குழந்தையைத் தூக்கிவைத்துக்கொண்டு, 'அழகே! அஞ்சுகமே! அன்புருவே!' என்று வர்ணித்துக் கொண்டிருக்கிறார்கள்!

ஏன் இந்தப் பாராட்டு?

தெற்கைப் புறக்கணித்தார்கள் என்று நாம் மட்டுமல்ல; தமிழகத்தின் தேசீய ஏடுகள்—வாயைக் கட்டிப்போட முடியாத சில தேசீயத் தலைவர்கள்—எங்கிருந்தோ வந்துசென்ற வெளிநாட்டு மேதைகள்—எல்லாருமே அத்திட்டத்தில் புகுந்திருக்கிற கொடுமையை எடுத்துச் சொல்லாமல் விட்டதில்லையே!

கேட்டதைக் கொடுத்தால் கற்பக விருட்சம் என்பார்கள்; அது கேட்டதைக் கொடுக்காத 'அற்பத் திட்டம்' என்று எல்லாருமே தெரிந்திருக்கிற நேரத்தில் அதை விளக்கிப் புத்தகங்கள் ஏன்? திரைப்படங்கள் ஏன்? அவர்களே திருப்தி கொண்டிருக்கிற ஒரு திட்டத்தை அவர்களே எடுத்து வைத்துக்கொண்டு புகழ்வதின் நோக்கம் என்ன?

நம்மை மடக்க—நம் இயக்கத்தின்பால் மக்கள் கொண்டிருக்கிற பற்றைப் பறிக்க—தேசீயத்தாருக்கு இன்று கிடைத்திருக்கிற ஒரே ஒரு பரிதாபத்திற்குரிய கருவி அது ஒன்று மட்டுமேதான்!

ஆகவே, பொதுமக்கள் இப்போது போலிகளைக் கண்டு எச்சரிக்கையாக இருக்கவேண்டிய நேரம் இது. தூங்குகின்றதோழர்களையும் தட்டி யெழுப்பி 'உங்கள் தொடையிலே காங்கிரசார் கயிறு திரித்து விடுவார்கள்— ஏமாந்து விடாதீர்கள்' என்று எச்சரிக்க வேண்டிய சமயம்! காந்தியாரைக் காட்டி, அவரது படத்தைக் ககட்டி, நேருவைக் காட்டி, அவர் பெற்றிருக்கும் புகழைக் காட்டி, காளை மாட்டைக் காட்டி ஓட்டுப் பெற்ற பழைய முறைகள் இனி பலனற்றுவிட்டது என்று கண்டுவிட்ட காரணத்தால் 'உளுத்துப் போன திட்டமான' ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்து நீட்டுகிறார்கள்.

எனது தலைவர் சீசர் எழுதிய இந்தச் சாசனமிருக்கிறதே; அதன் மகத்துவம் மிகப் பெரிதாகும். இது ரோம சாம்ராஜ்யத்தின் சிறப்புக்கே மூலதனமானது—என்று கர்சித்த மார்க் ஆண்டனி பெருந்திரளான மக்களைத் தன்பக்கம் இழுத்துக் கொண்டானாம். ஆனால், அவன் தூக்கிக் காட்டிய காகிதச் சுருளில் எந்தச் சாசனமும் இல்லை, அது வெற்றுக் காகிதம்—என்று ஒரு வரலாற்றுக் கற்பனையைச் சொல்வார்கள். அது போன்றதொரு நூல்தான் தென்னாட்டைப் பொறுத்தவரையில் ஐந்தாண்டுத் திட்டமும் என்று நாட்டு மக்களிடையே எடுத்துச் சொல்லவேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

"ஐந்தாண்டுத் திட்டத்தை எதிர்ப்பவர்களா? அவர்க்ள் எல்லாம் தேசத் துரோகிகள்!" என்று கனம் அமைச்சர்கள்சென்றஇடங்களிலெல்லாம் இப்போது கர்சித்துக் கொண்டிருக்கிறார்கள்

அந்த மக்களையே நாமும் சந்தித்துச் சில உண்மைகளைத்தெரிவித்தாகவேண்டும். ஐந்தாண்டுத் திட்டத்தை ஆதரித்துப் பிரச்சாரம் செய்வதற்காக மாதம் ஒன்றுக்கு ஆயிரத்தைந்நூறுக்குமேல் சம்பளம் பெற்றுவந்த தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம், முன்பு வெள்ளையனை ஆதரித்து யுத்த பிரச்சாரம் செய்து வந்தவர் என்பதை மக்கள் உணரச்செய்ய வேண்டும்!

பக்ராநங்கல்—ஹிராகுட் போன்ற வடநாட்டுத் திட்டங்களுக்கு வாரியிரைக்கப்படும் தொகை எத்தனை கோடி! இங்கே 'பிச்சை போடுகின்ற' தொகை எத்தனை கோடி? புள்ளி விபரம் நீட்டப்படவேண்டும்!

நம் இனத்திலே பிறந்த எண்ணற்றோர் இலங்கையிலே உயிர்ப்பலி தருகிறார்கள்! அதை ஏன் என்று கேட்கமுடியாத காங்கிரசுக்கு ஏன் உங்கள் ஓட்டு?—மக்கள் மத்தியிலே வினாக்குறி எழுப்பப்படவேண்டும் !

டால்மியாபுரத்திலே—தூத்துக்குடியிலே— துறைமுகத்திலே—உரிமை முழக்கமிட்டோரின் மார்பகங்களைத் துப்பாக்கி வெடி குண்டுகள் துளைக்க, எலும்புக்கூடுகளைத் திருப்பித் தந்த 'மனித வேட்டைக்காரர்களுக்கு' நாம் ஆதரவு கொடுக்கலாமா?—தெருச் சுவர்களிலும் இந்த உண்மையைப் பறைசாற்ற வேண்டும்!

"தாலியைக் கொடு என்று கேட்டார்களே! தாய்மார்களே! அந்த பகற்கொள்ளைக்காரர்கள் பல்லைக்காட்டி வருகிறார்கள், ஜாக்கிரதை! ஜாக்கிரதை!— என்ற எச்சரிக்கை தாயமார்களிடம் தரப்படவேண்டும்!

இப்படி எண்ணற்ற பணிகள்—இந்த நாட்டு எத்தர்களின் இருதயத்தைப் படம் பிடிததுக் காட்டும் செயல்கள்—நிறைய வருகிறது நமக்கு!

நாம் ஒவ்வொருவரும் கடமையாற்றும் சிங்கங்களாக மாற வேண்டும் என்பதை உணர்த்தி தேர்தல் பிரச்சாரத்தைக் துவக்கும் மாநாடு இத்திங்கள் 16, 17 தேதிகளிலே கூடுகிறது கோவையில்!

சோரா உணர்ச்சி கொண்டிடுவோம்!

கோவைக்குத் திரண்டு வாரீர்!!

—o—o—

இதோ ஒரு சஞ்சீவி

கால் ஆணிக்கு

(மேல் பூச்சு மருந்து)

காலில் குழி விழுந்தும், சதை வளர்ந்து முற்றியும் நடக்க முடியாமல் வருந்துபவர்களுக்கு நிச்சயநிவாரணி

விலைதபால்செலவுடன் 4- 25

வாணி புக் டிபோ,

3, மலையபெருமாள் தெரு, சென்னை-1.

கூட்டெழுத்துக்கள்

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட பல மெய்கள் தொடர்ந்து ஒன்ருய் வந்து உயிரேற்கும் போது, தமிழில்: முன்வரும் எல்லா மெய்களும் புள்ளி பெற்றுத் தனி ஒற்றெழுத்துக்கள் ஆகும். கடைசி மெய் மட்டும் உயிருடன் இணைந்து ஒரே உயிர் மெய் எழுத்தாகும்.

மலையாளக் கூட்டெழுத்துக்கள்

மிக எளிதான கூட்டெழுத்து வடிவம் முதல் மெய்யை மேலும் பின்வரும் மெய் அல்லது மெய்களைக் கீழும் எழுதுவதாகும். வேறு தனி வடிவம் இல்லாதபோதெல்லாம் இந்த எளிய முறையைத் தாராளமாகக் கையாளலாம்.

பின்வரும் மெய் வடிவங்கள்:



ஆகியவையாக வரும்போது அவற்றை முதல் மெய்யின் கீழே தனிவடிவாகக் கீழ்வருமாறு எழுதலாம்.



முதலில் முன்வரும் மெய்வடிவம் ரகரமாயிருந்தால் அடுத்துப் பின்வரும் மெய்யையே எழுதி மேலே ஒரு கூரிய புள்ளியிட்டால் போதும்.



அடுத்தடுத்து வரும் கீழ்வரும் தனி கூட்டெழுத்து வடிவம் கண்டு தெரிந்து பயில்வதற்குரியன.

இரட்டை எழுத்துக்கள்:



பிற முக்கிய இணைப்புக்கள்



—தொடரும்

(9—ம் பக்கத் தொடர்ச்சி)

ருரே கேட்கின்றனராம்.

டாடா, ஏன், பேசமாட்டார்! பணம் கேட்கப்படுகிறது, பாராளும் கட்சியால்.

அசோகமேதா சொன்னபத்துப் பேரில் டாடாவும் ஒருவர்! அவரிடம் ஓடி ஓடி மாநிலக் காங்கிரஸ் கமிட்டிகளும், மத்திய காங்கிரஸ் கமிட்டியும் பணம் கேட்கின்றன பணம்!!

முன்பொரு தடவை, கான்பூரிலே பேசிய பண்டித நேரு அரசியல் கட்சிகளுக்குக் கம்பெனிகள் நன்கொடை தருவதை நான் வெறுக்கிறேன் என்ற கருத்துப்பட பேசினர், கேட்டவர்கள் அதிரும்படி பேசினர்!

ஆனல் இப்போது அவர் அங்கம் வகிக்கும் காங்கிரசுக் கட்சி—ஆளும் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பவர்கள்—மத்திய பீடம் மாநிலங்கள் எல்லா இடங்களில் இருந்தும் பணம், பணம் என்று கேட்கிருர்களாம்! பேசுகிருர் பத்திலே ஒருவரான டாடா!

மகன் வாங்கும் சம்பளம் இருநூறு ரூபாய் என்ருலும், அந்த ரூபாய்களை, ஆசைக் குரியவளாய் பணம் பறிக்கும் பாவையாய்த் திகழும் தாசியிடம் தந்து விட்டு, தாய்க்கு ஒரு வேளை சோற்றுக்குக்கூட வழிசெய்யாத செய்ய முடியாத தனயனைப் போல் தேர்தல் நிதிக்குப் பணம் பறிக்கும் பக்குவத்தைக் கவனத்திலே வைத்துக்கொண்டு, நாற்பதுகோடி மக்களின் வாழ்க்கையை, டாடா போன்ற பத்துப்பேர் கைகளிலே ஒப்படைத்து, மக்களை வறுமையிலே வாடிவதங்கவிட்டு கொண்டிருக்கிறது காங்கிரசு ஆட்சிபீடம்!

"தம்பீ! ஒருவேளைசோறுதானு? இருநூறு ரூபாய் சம்பாதிக்கிருயாமே!" என்று ஏக்கத்தோடு கேட்கும் தாயைப் போல, தேசிய வருமானம் 4 பங்கிலிருந்து 7 பங்காக உயர்ந்திருக்கிறது என்கிறீர்களே எங்களுக்கு எங்கே வாழ்வு? வறுமைதானே எங்களிடம் அதிகரித்திருக்கிறது என்கிருர்கள், ஏழைகள் எளியவர்கள், எதுவுமற்றவர்கள்!

இருநூறு ரூபாய் சம்பளம் என்று தாய் கேட்டவுடன் அதெல்லாம் யாரோ மூட்டிவிட்ட கோள் என்று மூடிமறைக்கும் மகனைப்போல, தேசிய வருமானம் உயர்ந்துதான் இருக்கிறது, திட்டத்தால். ஆனல், அது எங்கே என்றுதான் புரியவில்லை என்று புதிய விளக்கம் தருகிருர்கள்; உயர்ந்த தேசிய வருவாய் ஓடி ஒளிந்த இடத்தைத் தேடிக் கண்டுபிடிக்கக் குழு அமைக்கிருர்களாம், குழு!

நெஞ்சறிந்த உண்மைக்குத் திரையிட்டு மறைக்கும் இவர்களுக்கு நீதியை, காலந்தான் போதிக்கவேண்டும். *

(4—ம் பக்கத் தொடர்ச்சி)

வேளை அவள் கணவனுக இருக்குமோ! பிறகு ஏன் அவள் என்னை அழைத்தாள்—ஆசை வார்த்தைகளை உதிர்த்தாள்!! படத்தில் என் கவனம் ஓடவில்லை. எழுந்தேன். என் நண்பனை அழைத்துக் கொண்டு நடந்தேன்.

"எதிரில் உட்கார்ந்திருந்தாளே அவளைக் கவனித்தாயா?' என்று கேட்டான் நண்பன்.

"கவனித்தேன்! அவளுக்கு என்ன...? என்றேன் நான்.

"பெரிய ஆளப்பா அவள்! இந்த வட்டாரத்தில் அவளுக்கு அடிமையாகாதவர்கள் கடையாது..."

"அப்படி யென்ருல்...?"

"...போப்பா! இன்னுமா விளக்கமாகச் சொல்வாகள். அவள் ஒரு அந்தி நேரத்து அழகி..."

"தாலியிருந்ததே, கழுத்தில்!"

நடந்த வரலாற்றை நண்பனிடம் சொன்னேன். அவன் சிரித்தான்.

"நல்லவேளை! அந்தத் தாலி அவளுக்குக் கட்டியது யார் தெரியுமா? கோயிலிலே குடிகொண்டிருக்கும் ஆண்டவன்! ஆமாண்டா அவள் பொட்டுக்கட்டி விடப்பட்டவள்...தாசி...,'

என் தலை சுழன்றது. தாசி என்பதால்தானு அவள், முட்டாளிடம் அகப்பட்ட அறிவு நூல் என்று சொன்னுள். அவளுடைய அழகான முகம் மீண்டும் என் கண்களில் தோன்றியது.

"எவ்வளவு அழகானவள்!" என்றேன்.

"அது அவள் சொத்து! அழகாயிருப்பதால்தான் அவள் வீட்டிலிருக்கிருள். அந்த அழகு இல்லாத காரணத்தால் அவளைப் போன்ற பலபேர் வீதிக்கோடியில் நிற்கிருர்கள்...' என்ருன் நண்பன்.

"வறுமையின் காரணமாக விபசாரத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பெண்களைப் போன்ற தியாகிகள் உலகத்திலேயே கிடையாது!" என்று காந்தியடிகள் எழுதிய வாசகம் என் கவனத்துக்கு வந்தது... முட்டாள்தனமான சமூக அமைப்பில் சிக்கிய அறிவு நூல்கள் என்று என் வாய் முணுமுணுத்தது...அதைத் தொடர்ந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் என் கன்னங்களில் வழிந்தது *

கேள்வி பதில்

கே: வருகிற பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சி போட்டியிடுகிறதா?

பி. கே. முஸ்தபா,
கீழக்கரை

ப: என்ன கேட்கிறீர்கள்? தமிழ்த் தேசியக் கட்சியா? அப்படி ஒரு கட்சி இந்த நாட்டில் இருப்பதாகவே நினைவில்லையே!

* * *

கே: கூட்டம் ஒன்றுக்கு ரூ. 150 தரவேண்டும் என்று பெரியார் அறிக்கை விட்டிருக்கிறாரே?

எம். பி. எஸ் வேணு,
சிங்காநல்லூர்.

ப: பெரிய பெரிய பஸ் முதலாளிகளையும், மில் சொந்தக் காரர்களையும் காங்கிரஸ் கட்சி தேடிப்பிடித்து தேர்தலில் நிற்க வைப்பதற்குக் காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள்? பெரியாரின் வயிற்றை நிரப்பத்தான் அகப்பட்ட நேரத்தில் சுருட்டிக் கொள்ளும் அகசாயச் சூரராயிற்றே அவர்! தேர்தலுக்கும் பிறகு காங்கிரசே இல்லாமல் போய்விட்டால் என்ன செய்வது என்று இப்போதே சேர்த்துக் கொள்கிறார்.

* * *

கே; மந்திரி மாணிக்கவேலருக்கு இன்னும் தொகுதி ஒதுக்கப்படவில்லையே; ஏன்? துரிஞ்சிபுரத்தில் அவர் போட்டியிடப் போவதில்லையா?

கே. டி. எஸ். கிருஷ்ணா
பெங்களூர்

ப: மாணிக்க வேலருக்குத் தன் நிழலே தனக்கு எதிராக இருக்கிறதோ—என்ற பயம் வந்துவிட்டது இப்போது! ஆகவேதான் துரிஞ்சாபுரத்தை விட்டு ஓட முயற்சிக்கிறார் என்று வதந்தி உலவுகிறது. போகிற போக்கைப் பார்த்தால் 1652 திரும்புமோ என்ற சந்தேகம் அவருக்கு மட்டுமல்ல: எல்லா மந்திரிகளுக்குமே இருக்கிறது. அந்தத் தேர்தலில் டாக்டர் சுப்பராயன் கே. சந்தானம், சந்திரமௌலி — போன்ற அமைச்சர்கள் சென்னையில் தோற்கடிக்கப் பட்டது நினைவிருக்கலாம்.

* * *

கே; தென் சென்னை பாராளுமன்றத் தொகுதிக்கு யார் காங்கிரஸ் அபேட்சகர்?

எப். டி. சுல்தான்,
ஆயிரம்விளக்கு

ப: எத்தனையோ பேருக்கு கனம் காமராசரும், அளகேசனும் வலைவீசிப் பார்த்தும், பலன் இல்லையாம். அந்த ஆள் பிடிக்கும் படலம் ஒரு சுவையான கதையாகும். முடிவில் சிம்சன் அதிபர் அனந்தராமகிருஷ்ணன் பெயர் பெரிதாக அடிபட்டது! அவர் சிக்கவில்லை என்று பின்னால் தெரியவந்தது. அடுத்து ஜெமினி அதிபர் வாசன் நிற்பதாகச் சொன்னார்கள்; மதுரை தி. மு. க, மாநாட்டுப் படங்களை இரண்டு கலரில், ஆர்ட் பேப்பரில் அச்சிட்ட மறுநாள் முதல் அவர் மேல் சந்தேகம் போலும்; அதே வதந்தியும் விடை பெற்றுக் கொண்டது! சமீபத்தில் செங்கல்வராயனின் பெயரும் பரவியது. அவரோ. "என்னை தோற்கிற இடத்தில் நிற்கவைத்துஅவமானப் படுத்துவதே தமிழ்நாடு காங்கிரசின் வேலையாகிவிட்டது!', என்று சொல்லி மறுத்து விட்டதாக வதந்தி! (அவர் முன்பு வட சென்னையில் போட்டியிட்டுத் தோற்றவர்) இப்படி எல்லோரும் சிக்காமல் போகவே, இறுதியில், இப்போது டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரைச் சுற்றிக் கொண்டிருக்கிறார்களாம்! முடிவு என்னவாகுமோ தெரியவில்லை' அந்தோ பரிதாபம்", சுதந்திரம் வாங்கித் தந்த தியாகக் கட்சிக்கு தேர்தலில் நிற்க ஆள் கிடைக்காத அவலமுமா நேரவேண்டும்?

* * *

கே: நிதியமைச்சர் சுப்பிரமணியம் ஏன் டெல்லி சட்ட சபைக்குச் செல்கிறார்?

பி. பிரேமாவதி;
பொள்ளாச்சி

ப: ஐந்து வருடம் சட்டசபையில் பட்ட 'அடி' அவரை அப்படி ஓட ஓட விரட்டுகிறது! வார்த்தைக்கு வார்த்தை; எழுத்துக்கு எழுத்து அறிஞர் அண்ணா தந்த 'சூடு, காமராசரும் கொஞ்சம் அவதிப்படட்டுமே என்ற ஆசையும் தான் அவரது 'தமிழகத் துறவு'க்கு மூல காரணங்கள்.

* * *

கே: நாடாள்வோரையும், வியாபாரம் நடத்துவனதயும் ஒப்பிட்டுப் பேசலாமா?

தி. முருகையன்,
வேலூர்

ப: வியாபாரம் நடத்துவதென்றால் நல்ல பேச்சுத் திறமையும், வசீகரகானதோற்றமும், நாக்கு நாணயமும் நிச்சயமாகத் தேவை- ஆனால், நாடாள்வதற்கு இவை ஒன்றுமே தேவையில்லைபோல் தெரிகிறதே கனம் காமராசனரயும், பக்தவத்சலத்தையும் பார்க்கிற போது!

கே: காந்தியார் விளையாட்டுக்குக் கூட பொய் பேசக்கூடாது என்று சொல்லி, அதையே தன் வாழ்க்கையிலும்கடைப்பிடித்து வந்தாராமே...?

டி- கே- தங்கவேலு;
சிங்கம்புணரி.

ப: அவர் செய்த அந்த குற்றத்திற்கு பிராயசித்தமாகத் தான் இப்போதுள்ள காங்கிரசார் அத்தனைபேரும் பொய்யைத் தவிர வேறு எதையுமே பேசுவதில்லை!

°° °° °°

இல்லம்

ஏராளமான எழில்மிகு ஓவியங்களை வரைந்திருந்தார் இதுவரையில்! இருந்தும் 'ஒப்பற்ற ஒன்றைத்'தான் இன்னும் உண்டாக்காததுபோல் அந்த ஓவியருக்குத் தீராத மனக்குறை இருந்தது!! ஊரைவிட்டுக் கிளம்பினார்...

நெடுந்தூரம் நடந்து, வயதான ஞானியொருவரைக் கண்டார். "ஐயா! உலகத்திலேயே அழகான ஒன்றை ஓவியமாக்க ஆசைப்படுகிறேன்..அது எது என்று எனக்குச் சொல்லுங்கள்", என்றார்.

"இதோ உனக்குத் தெரியவில்லை! தம்பீ உலகிலேயே அழகானது நம்பிக்கைதான். நம்பிக்கையைவிடச் சிறந்தது நானிலத்தில் இல்லை!" என்றார் ஞானி. ஓவியரின் வேட்கை தீரவில்லை! அங்கிருந்து கிளம்பினார்...

இளங்கன்னியொருத்தியைக் கண்டார். எழில் மயிலே! உன் கருத்துப்படி உலகத்திலேயே ஒப்பற்ற ஒரு பொருள் எது? சொல்வாயா! என்று கேட்டார்.

"காதல்! காதல்!! மண்குடிசை, மாடமாளிகையென்கிற பேதம் அதற்கில்லை; கண்ணீரையும் தித்திக்கச் செய்வது காதல்; எதையும் வெல்லும் வீரத்தையூட்டுவது காதல்! காதலில்லாவிடில் உலகத்தில் அழகே இல்லை!!" என்றாள் அம்மங்கை. ஓவியரின் உள்ளம் திருப்தியடையவில்லை. அங்கிருந்து நடந்தார்...

களைப்புற்ற ஒருவீரன் போய்க் கொண்டிருந்தான். "மாவீரனே! என் சந்தேகத்தைத் தெளிவடையச் செய்வாயா?" என்று கேட்டார் ஓவியர்.

"உலகிலேயே உன்னதமானது அமைதி. அதைவிட அழகானது இந்த அவனியிலேயே கிடையாது. போர் என்பது ஒரு புழுதிக்காடு. அமைதி என்பது நீரோடை வாழ்வு எனும் நீலோற்பலங்கள் பூக்கும் வற்றாத இன்ப நீரோடை சமாதானம்!" என்றான் அந்தவீரன்.

நம்பிக்கை—காதல்—அமைதி இம்மூன்றையும் எப்படி நான ஓவியமாக்க முடியும்? இவைதான் உலகத்திலேயே ஒப்பற்ற அழகுகளாம்! என்ன செய்வேன்? எப்படி இவைகளுக்கு நான் உருவம் கொடுப்பேன்? எங்ஙனம் ஒப்புயர்வற்ற ஓவியம் ஒன்றை உருவாக்குவேன்? மனம் சியடங்க மார்க்கம் கிடைக்காதா! ஒன்றும் விளங்கவில்லையே!! ஆவல் அடங்க வழி இல்லையா? அய்யோ! நான் என்ன வரைந்து என்ன பயன்?—என்று வேதனைகலந்த நிலையில் விரைந்தார் தன் இல்லத்துக்கு...

இல்லத்துக்குள் எடுத்தடி வைத்ததுமே உலகிலேயே மிக மிகச் சிறந்த அழகான பொருளைக் கண்டார். அவருடைய இளங்குழந்தைகள் 'அப்பா!' என்று அழைத்துக் கொண்டு ஓடிவந்தன. அவைகளின் கண்களிலே ஞானி சொன்ன 'நம்பிக்கை' தென்பட்டது!

"வந்தீங்களா?" என்று அவருடைய ஆசை மனைவி வந்தாள். அவளுடைய உருவிலே 'காதல்' கிடைத்தது! மாவீரன் பெருமூச்சோடு சொன்னானே, அந்த 'அமைதி' அவருடைய அடக்கமான இல்லத்திலே இருந்தது!

உடன் தூரிகையை எடுத்தார். "உலகத்திலேயே உன்னதமான அழகுள்ள ஓவியத்தை" வரைய ஆரம்பித்தார். வேலைகள் முடிந்ததும் அந்த ஒப்பற்ற ஓவியத்தை உற்றுப் பார்த்தார். அதற்குக்கீழ் "இல்லம்" என்கிற பெயரை எழுதிவிட்டுப் புளகாங்கிதமடைந்தார்!!

* * * * *

ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 12- 3. வது குறுக்குத்தெரு .டிரஸ்ட்புரம், சென்னை 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி முல்லை அச்சகம் 3-40 மவுண்ட்ரோடு சென்னை-6